Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

கண்ணோட்டம் KANNODDAM

வெளியீடு-53 | 20 ஜூலை 2010 | விலை: 10.00

அரச அதிகாரத்திற்கும் ஜனநாயக உரிமைகளுக்கும் இடையிலான சமநிலையில் தான் மக்களின் சுதந்திரம் உணரப்படுகிறது உறுதிப்படுத்தப்படுகிறது.

## அரசியல் யாப்பு திருத்தத்தில் அரசியற் தீர்வு எத்தனையாவது கட்டம்?

இப்போதிருக்கும் அரசியல் யாப்பில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் ரணில் விக்கிரமசிங்கா அவர்களுடன் அண்மைக்காலமாக நடத்திவரும் பேச்சுவார்த்தைகள் மிகவும் சுமுகமாகவும் முன்னேற்றகரமாகவும் இருப்பதாக பரவலாக நம்பிக்கைகள் தெரிவிக்கப்படுகின்றன.

ஜனாதிபதி தான் தொடர்ந்தும் அரசுத் தலைமைப் பதவியில் இருப்பதற்காகவே இதனை மேற்கொள்கிறார் என்றும் அதேவேளை ரணில் விக்கிரமசிங்கா தனக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எழுந்துள்ள எதிர்ப்புக்களை திசை திருப்புவதற்காகவே இந்த பேச்சுவார்தகை நாடகத்தை நடத்துகிறார் என்றும் அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

எவ்வாறாயினும் நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை மாற்றப்படுவதற்கான திசையை நோக்கி இலங்கையின் அரசியல் நகர்கிறது என்பது தெளிவாகிறது.

### மாற்றமா? பிரதமர் கதிரையில் ஜனாதிபதியா?

அதேவேளை நிறைவேற்றதிகாரம் கொண்ட பிரதமர் முறை என்பது என்ன என்று இன்னமும் தெளிவாகவில்லை. இது இங்கிலாந்து பாரம்பரியத்தினை கொண்ட பழைய பிரதமர் ஆட்சிமுறையைக் குறிக்கிறதா? அல்லது வெறுமனே இன்று ஜனாதிபதி கொண்டிருக்கும் அளவற்ற அதிகாரங்கள் அப்படியே பாராளுமன்றத்தில் அமர்ந்திருக்கும் பிரதமர் என்னும் பதவி கொண்டவருக்கு மாற்றப் படவுள்ளதா? புதிதாகப் பேசப்படும் பிரதமர் மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படுவாரா? அல்லது நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை கொண்டவர் தான் பிரதமராவாரா? பொதுத் தேர்தலுக்குப் பின்னர் பிரதமராகும் ஒருவர் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையினை இழக்கும் பட்சத்தில் பதவி இழப்பாரா? அல்லது அவர் பெரும்பான்மையை இழந்தாலும் தொடர்ந்து அந்த நாடாளுமன்றப் பதவிக் காலம் முழுவதுவும் பிரதமராகவே இருப்பாரா? என்பன போன்ற பல கேள்விகளுக்கு பதில் எதுவும் இன்னமும் தெளிவாக வெளிப்படுத்தப்படவில்லை.

### இனப்பிரச்சினைக்கு தீர்வு?

ஜனாதிபதியின் அரசியல் யாப்பு திருத்த நிகழ்ச்சி நிரலின் முதற் கட்டத்தில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயம் இடம்பெறவில்லை என்பது மட்டும் தெளிவாகிறது.

முதலில் பயங்கரவாத ஒழிப்பு, இரண்டாவது பொருளாதார அபிவிருத்தி பின்னரே அதிகாரப் பகிர்வு என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த காலங்களில் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போதும், யுத்தம் முடிந்த பின்னரும் பல தடவை கூறி வந்திருக்கிறார். அதிகாரப் பகிர்வு தொடர்பாக ஜனாதிபதி எவ்வகையான திட்டத்தைக் கொண்டிருக்கிறார் என்பதுவும் இன்னமும் வெளிப்படுத்தப்படவில்லை. அரசின் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண அவர்களின் பரிந்துரைகளை அரசாங்கம் ஏற்றிருக்கிறதா? இல்லையா என்பது பற்றியும் யாருக்கும் தெரியாது.



இனப்பிரச்சினைக்கு உரிய அரசியற் தீர்வை இலங்கை அரசாங்கம் மிகவிரைவில் வழங்க வேண்டும் என இந்தியாவும் மற்றும் சர்வதேச நாடுகளும் ஜனாதிபதியை வலியுறுத்தி வருகின்றன. நியாயமான அளவில் அதிகாரப் பகிர்வை அரசாங்கம் விரைவில் வழங்க வேண்டும் என்பதே தமிழ்மக்களின் எதிர்பார்க்கையுமாகும்.

## 20 வது தியாகிகள் தினம்



இதுவரை காலமும் கட்சி அலுலகங்களுக்குள் அனுஷ்டிக்கப்பட்டு வந்த தியாகிகள் தினம் இவ்வருடம் முதல் தடவையாக யாழ் மாவட்டத்தில் பொது மண்டபத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. இறந்த தோழர்களின் பெற்றோர்கள், கட்சியின் நலன் விரும்பிகள், உட்பட பெருமளவானோர் இந்த வைபவத்தில் கலந்துகொண்டனர். ஈழமக்கள் ஜனநாயக கட்சி (ஈ.பி.டி.பி) தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜ கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகள் இவ்வைபவத்தில் பங்கேற்று உரை நிகழ்த்தினர். மட்டக்களப்பு மாவட்டத்தில் வழக்கம் போல தியாகிகள் தின ஊர்வலமும் அஞ்சலி நிகழ்வுகளும் இடம்பெற்றன. திருகோணமலையிலும் 19.06.2010 அன்று தியாகிகள் தின நிகழ்வுகள் இடம்பெற்றன. சென்னை புழல் இலங்கை தமிழ் அகதிகள் முகாமிலும், இங்கிலாந்து மற்றும் கனடாவிலும் அதே தினம் தியாகிகள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. ஜேர்மனியில் ஜூன் 26ம் திகதியும் சுவிற்சர்லாந்தில் ஜூன் 27ம் திகதியும், பிரான்சில் ஜூலை 11ம் திகதியும் தியாகிகள் தின அஞ்சலி நிகழ்வுகளும், பொதுக்கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.




யாழ்ப்பாணம்


பிரான்ஸ்


இங்கிலாந்து


தியாகிகள் தினம் ஏன்? பக்கம்- 03



தோழர் உபாலியின் நினைவுகள் பக்கம்- 04



அபிமன்யு பதில்கள் பக்கம்- 05

ஒற்றுமைக்கு சம்பந்தா அழைப்பு பக்கம்- 06



வரதராஜப் பெருமாள் செவ்வி பக்கம்- 07




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டம்
Kannottam

# மானிட மேன்மைக்காக் ஒருங்கிணைந்து செயற்படுவோம்

பாராளுமன்றத் தேர்தல் முடிவுற்று அறுதிப்பெரும்பான்மையை எட்டிய அரசாங்கம் உருவாகியிருக்கும் நிலையில் மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்புக்கள் காணப்படுகின்றன.

மாற்றத்தினூடாக புரையோடிப்போன இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கிட்டாதா என்ற அங்கலாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

பொறுப்புடனும் நிதானத்துடனும் ஜனநாயக நெறிமுறைகளை மதித்து இணைந்து செயற்பட வேண்டும். எல்லோரும் ஐக்கியப்பட வேண்டுமென்று வாய்ப்பந்தல் போடுவதில் எதுவித பிரயோசனமும் இல்லை.

தமிழ் பேசும் மக்கள் இலங்கையின் ஆட்சி முறைமையில் பங்குதாரர்களாக தமது தனித்துவம் உரிமைகளை உறு

உறுதுணையாக இருக்கும் விதத்திலேயே எண்ணங்களும், கருத்துக்களும் செயற்பாடுகளும் அமைய வேண்டும்.

வெறும் தேசியவாத போதையை ஊட்டி மக்களை மேலும் மேலும் துன்பங்களையும், அழிவுகளையும் ஏற்படுத்தும் விபரீத அரசியல் நம் மத்தியிலிருந்து விலக்கி வைக்கப்பட வேண்டும்.

கடந்துவந்த 20 வருடங்களுக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண கிடைத்த சந்தர்ப்பங்கள் பல துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கின்றன. அல்லது உதாசீனம் செய்யப் பட்டிருக்கின்றன. இதனை நாம் உணரத்தலைப்பட வேண்டும்.

இந்த சந்தர்ப்பங்கள் வாய்ப்புக்கள் புத்திபூர்வமாகவும் தீர்க்கதரிசனமாகவும் கையாளப்படாததால்தான் பாரிய உயிரிழப்புக்களுக்கும் அழிவுகளுக்கும் வழிசமைக்கப்பட்டது.

ஏற்கனவே 30 வருட யுத்தத்தில் பேரழிவை சந்தித்த எமது மக்கள் இன்னும் எழுந்து நிற்க முடியவில்லை. அவர்கள் சொந்தக்கா..லில் எழுந்து நிற்பதற்கு பாரிய அளவிலான சமூக பொருளாதார அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பிள்ளைகளின் கல்வி, தொழில், இல்லம், சுகாதாரம் போன்ற விடயங்களில் அதிகூடிய கரிசனை செலுத்தப்பட வேண்டும். உள்ளக கட்டமைப்பு வசதிகள் விருத்திச் செய்யப்பட வேண்டும்.

மோதல் வகைப்பட்ட குரோத வகைப்பட்ட அரசியலை தவிர்த்து ஆக்கபூர்வமாக எமது மக்களுக்கு எது நிகழ வேண்டும் என்ன செய்யப்பட வேண்டும் என்று கருதி இதயபூர்வமாக எண்ணி செயற்பட வேண்டும்.

எமது தனித்துவத்துடன் சக சமூகங்களுடன் சமத்துவமாக சகோதரர்களாக வாழ்வதற்கான உரிமைகளை ஏற்படுத்த வேண்டும்.

புலம் பெயர் நாடுகளிலும் சரி உள்ளூரிலும் சரி எமது மக்களுக்கு நன்மை பயக்கும் விதமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். காழ்ப்புணர்வையும், விரோதத்தையும் வளர்ப்பது மேலும் மேலும் அழிவுகளைத்தான் ஏற்படுத்தும்

எமது மக்களின் உரிமைகளை வன்முறையற்ற ஜனநாயக வழிகளில் மக்கள் இயக்கமாக வலியுறுத்த வேண்டும். அதற்கு தமிழ் ஜனநாயக சக்திகள் மாத்திரமல்ல இலங்கையின் அனைத்து முற்போக்கு சக்திகளும் இணைந்து செயற்பட வேண்டும்.

இந்த நாட்டின் பெரும்பான்மையான சிங்கள மக்களின் நல்லெண்ணத்தை நாம் பெற வேண்டும். அவர்கள் எமது நிலையை புரிந்து கொள்ளும் நிலையை ஏற்படுத்த வேண்டும்.

எமது தனித்துவமான சமூக அக்கறைகளுடன் தேசிய அக்கறைகளும் எமக்கு இருக்க வேண்டும். சர்வதேச அக்கறைகள் இருக்க வேண்டும். இன சமூக பொருளாதார சிக்கல்கள் மாத்திரமல்ல இயற்கை அனர்த்தங்கள், சூழலியல் சவால்கள் பற்றி நாம் அக்கறை கொள்ள வேண்டும்.

நாம் இங்கு விபரீதமான குடுமிபிடிச் சண்டையில் ஈடுபட்டிருக்கும் இந்தத் தருணத்திலேயே புவிக்கோளின் எதிர்காலம் பற்றிய சவால்களும் பூதாகரமாக எழுந்துள்ளன.

உதாரணமாக கால்நூற்றாண்டுகளாக இங்கு யுத்தம் நிகழ்ந்துக் கொண்டிருக்கையில் இந்தக் காலப்பகுதியில் இறந்தவர்களின் தொகையில் அரைவாசிப் பகுதியினரை கண் இமைக்கும் நேரத்தில் சுனாமி காவு கொண்டுவிடவில்லையா?

“கூட்டத்தில் கூடிநின்று கூடி பிதற்றலன்றி நாட்டத்தில் கொள்ளாரடி நாளில் மறப்பாராடி” என்ற மகாகவி பாரதியின் வார்த்தைகளை மனங்கொள்வோம்.

எமது மக்களின் வாழ்வில் ஒளியேற்றி வைப்பதற்கும் இன மத குல பேதங்கள் கடந்து செயற்படுவோம்.

மானிடத்தின் வெற்றியை உறுதிப்படுத்துவோம்.

இடர் மிகுந்த, இருள் சூழ்ந்த எங்கள் பயணத்திற்கு ஒளியூட்டி, கூடவந்து வழிகாட்டி ஆக்கமும் ஊக்கமும் அளித்து மக்களை நேசிக்கவும் சமூகத்தின் துன்ப துயரங்களுக்கு எதிராக போராடவும் கற்றுக் கொடுத்த கட்சியின் கொடிக்கால்கள்




கேதீஸ்வரன் | வீ.ஏ.கந்தசாமி | முகுந்தன் | சிவா | ஐயா

கனடாவில் தியாகிகள் தினம் 19.06.2010



கட்சி அமைப்புக்களில் முக்கியத்துவம் வழங்கப்படாதபோதும் கட்சியின் நலன், தோழர்களின் நலன் பேண குடும்பமாக உழைத்தவர்கள். அதனால் புலிகளின் இம்சைகளுக்கு உள்ளானவர்கள்



## பாரதப் பிரதமர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படவுள்ளாரா?

டெல்லி சென்று திரும்பிய கூட்டமைப்புக்காரர்கள் இவ்வாறு கூறியதாக யாழ்ப்பாணத் தமிழ்ப் பத்திரிகைகள் ஒட்டுமொத்தமாக ஒரு வேடிக்கையான தலையங்கத்தைத் தீட்டின. ஏதோ! மன்மோகன் சிங் அவர்கள் இந்தியாவுக்கான அவரது வேலைகளையெல்லாம் ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சேர்ந்து செயற்படப் போகிறார் என்ற உணர்வையே அந்தத் தலையங்கங்கள் கொடுத்திருந்தன.

உண்மையில், பொதுத் தேர்தல் முடிந்த நாள்தொட்டு தங்களை டெல்லிக்கு அழைத்து இந்திய அமைச்சர்களை சந்திப்பதற்கு ஒழுங்கு செய்துதரும்படி பல தடவைகள் கேட்டிருந்த நிலையில் கடந்த ஜூன் 8ம் திகதி ஜனாதிபதி டெல்லி வந்திருந்த நேரம் இந்தியப் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் சுமார் முக்கால் மணி நேரம் தனியானதொரு சந்திப்பு நடந்தது நிச்சயமாக அச்சந்திப்பில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வு பற்றியே பிரதானமாகப் பேசப்பட்டிருக்கும் எனக் கருத இடமுண்டு. அந்தப் பேச்சில் இந்திய அரசு திருப்தி கொண்டதோ இல்லையோ இலங்கை ஜனாதிபதிக்கு மேலும் ஓர் அழுத்தத்தைக் கொடுப்பதற்காகவும் அத்துடன் தமிழ்த் தேசியம், தமிழ்த் தேசம், சுயநிர்ணயம் என்ற மூடு மந்திரங்களை விட்டு இன்னமும் வெளிவராத கூட்டமைப்புக் காரர்களுக்கு அரசியல் வகுப்பு எடுப்பதற்காகவுமே அவர்கள் டெல்லிக்கு அழைக்கப்பட்டார்கள் என்று கூறுவதே சரியாகும்.

டெல்லி ஆட்சியாளர்கள் கூட்டமைப்பினருக்கு என்ன கூறினார்கள் என்பதை சம்பந்தர் மற்றும் விநாயகமூர்த்தியின் பேட்டிகளிலிருந்து தொகுத்தால்,

1. நடைமுறைக்கு யதார்த்தமான ஒரு விரிவான வரையப்பட்ட அதிகாரப் பகிர்வு கோரிக்கையை விரைவில் வெளிப்படுத்துங்கள்!
2. ஜனாதிபதி ராஜபக்ஷவுடன் நட்புணர்வின் அடிப்படையில் அரசியற் தீர்வுக்காக செயற்படுங்கள்
3. தமிழ் மக்களின் அடிப்படைப்பிரச்சினைகள் தொடர்பாக அனைத்துத் தமிழ்க் கட்சிகளுடனும் ஓர் இணக்கத்திற்கு வாருங்கள்.

டெல்லி கூட்டமைப்பினருக்கு அறிவுறுத்தியுள்ள புத்திமதிகளை கூட்டமைப்பினர் கடைப்பிடிப்பார்களா? அப்படி கடைப்பிடிக்கத் தவறினால் அடுத்த தடவை இவர்கள் டெல்லி செல்வதற்கு இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆகுமோ! கூட்டமைப்பின் தலைவர்கள் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு சந்திப்புத் தொடர்பாக தமது மகிழ்ச்சிப் பெருக்கைக் காட்டினாலும் உள்ளூர அவர்கள் அடுத்து என்ன செய்வதென அறியாமல் திகைத்து நிற்கிறார்கள் என்பதே உண்மையாகும்.

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.
அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:–


| | | |
|---|---|---|
| P - Fach No: 506<br>Bern - 17,<br>Switzerland. | P - Box No: 7183<br>Arumpakkam,<br>Chennai - 106,<br>India. | 29 ஏ, வாவிக்கரை வீதி<br>மட்டக்களப்பு.<br>☎ 065 2225179 |
| E.P.I.C., Box No: 95<br>95144 Garges Les,<br>Gonnesse Cedex,<br>France. | 310, ஆஸ்பத்திரி வீதி<br>யாழ்ப்பாணம்.<br>☎ 021 2222022 | No: 159, கடல்முக வீதி<br>திருகோணமலை.<br>☎ 026 2227118 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகிகள் தினத்தை ஏன் நினைவு கூருகிறோம்



இளங்கோ கொட்வின் அருள் கடாபி சந்திரன் செல்வன் மதன்லால் ஈஸ்வரன் வேலு றேகன் குமார்

கடந்து வந்த 30 வருடங்களில் இனங்களின் சம உரிமைக்காகவும், தமிழ் சமூகத்தினுள்ளே ஜன நாயகத்திற்காகவும், மனித உரிமைகளுக்காகவும், சமூக சமத்துவத்திற்காகவும் போராடி உயிர்நீத்த தோழர்கள், போராளிகள், பொதுமக்களை நினைவு கூர்வதற்காகவே தியாகிகள் தினம் அனுஷ்டிக்கப் படுகின்றது.

தியாகிகள் தின நினைவு கூரல் என்பது இதனுடன் மட்டுப்படுத்தப்பட்டதா?

நிச்சயமாக இல்லவே இல்லை. இத் தியாகிகளுடைய இலட்சியங்கள் ஈடேறுவதற்கு காரிய சாத்தியமான வழியில் நாம் பணியாற்றவேண்டும்.

மனிதர்களின் வாழ்வு பாரபட்சங்கள் ஒழிந்து சமாதானமும் ஐக்கியமும் அமைதியும் நிலவு வதாக அமையவேண்டும் என்பதே இங்கு எதிர்பார்ப்பாகும்.

உலகின் உயரிய மானிட விழுமியங் கொண்ட போராட்டங்களின் இலட்சியமும் இதுவாகத்தான் அமைந்தது. இந்த இலட்சியங்களை ஈடேற்றுவ தற்கு திட உறுதி கொள்வதே இவர்களுக்கு நாம் செய்யும் உண்மையான அர்த்தமுள்ள அஞ்ச லியாக இருக்க முடியும்.

ஏதிலிகளான எம் மக்களின் வாழ்வு மீள் கட்டி யெழுப்பப்பட வேண்டும்.

மனித உரிமையும் ஜனநாயகமும் நிலவும் சூழல் எம் சமூகத்தில் உருவாக வேண்டும்.

வன்முறைக் கலாச்சாரத்தின் மிச்ச மீதிகள் எம் சமூகத்தில் அடியோடு ஒழிய வேண்டும்.

அஹிம்சை முறையிலான மக்களியக்கம் கட்டியெழு ப்பப்பட வேண்டும்.

இந்த இயக்கம் மக்களின் உரிமைகளையும், சுற்றா டலின் பாதுகாப்பையும், சமூகபொருளாதார அபிவிருத் தியையும் இடையறாது வலியுறுத்துவதாகவும் அமைய வேண்டும்.

இது ஒரு விழிப்புணர்ச்சி இயக்கம். தியாகிகளின் பெயரில் செயற்படும்போது அவநம்பிக்கை களுக்கு இடமளிக்க முடியாது.

நம்பிக்கை எமது மனங்களில் பிரவாகிக்க வேண்டும்.

மனித குலத்தின் வாழ்வைச் செம்மைப்படுத்துவ தற்கும் மேலும் மேலும் மனிதாபிமானம் கொண் டதாக ஆக்குவதற்கும் சமூக அநீதிகளை பாரபட் சங்களை நீக்குவதற்கும் பங்களிப்புச் செய்வதற் காகவே தியாகிகளின் அர்ப்பணிப்புகள் நிகழ்ந்தன.

தோழர் பத்மநாபாவும் ஈபிஆர்எல்எவ் இன் பலநூற்றுக்கணக்கான தோழர்களும் சக இயக் கங்களின் போராட்டக்காரர்களும் மக்களும் இந்த எழிலார்ந்த கனவுகளுக்காகவே தம்மை அர்ப்பணித்தார்கள்.

இந்தக்கனவு மெய்ப்படவேண்டும். இதுவே தியாகிகளுக்குச் செய்யும் உண்மையான அஞ்ச லியாக இருக்கமுடியும்

காந்தியடிகள், ஜவஹர்லால் நேரு, பகத்சிங், கான் அப்துல் கபார்கான் போன்ற தலைவர்கள் கால னித்துவத்திற்கெதிரான இந்திய சுதந்திர இயக்கத்தை முன்நின்று நடத்தினார்கள்.

நெல்சன் மண்டெலா போன்ற தலைவர்கள் நிற வெறிக்கெதிரான போராட்டததின் குறியீடாக இருந்தார்கள்.

ஹோசிமின், சேகுவேரா போன்றவர்கள் சமூக சமத்துவத்தற்கான சர்வதேச சுரண்டலுக்கெதிரான போராட்டதிற்கு தலைமை தாங்கினார்கள் .

மனித குலத்தின் சுதந்திரத்திற்காக போராடிய பிடல் கஸ்டரோ, நெல்சன் மண்டெலா போன்ற தலைவர்கள் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

மியன்மாரின் ஜனநாயக சுதந்திரத்திற்காக போரா ட்டத்தின் தலைவி அங்- சாங்- சுஜி பலவருடங்களாக சிறையில் வாடுகிறார். இவர் விடுதலை செய்யப் படவேண்டும். பர்மிய மக்களின் ஜனநாயக சுதந்திரம் நிலை நாட்டப்பட வேண்டும்.

வங்கரி மாத்தா போன்ற புகழ் பெற்ற இயற்கை ஆர்வலர்கள் புவிக்கோளுக்கு ஏற்பட்டுள்ள அச்சு றுத்தலுக்கெதிராக காரியசாத்தியமான வழிகளில் செயற்படுகிறார்கள்.

எனவே நம்பிக்கைகள் வீண்போவதற்கு எதுவித காரணமும் இல்லை.

நுகர்வுவாத உலகத்தில் வியாபாரமயப்பட்ட உல கத்தில் மனிதத்தை நிலைநாட்டப் போராடுபவர்கள் நிகரற்ற மனிதர்கள்.

இலங்கையை ஒரு பல்லினங்களின் தேசமாக மாற்றி சமூக அநீதிகளை ஒழித்து சக சமத்துவத்தை நிலை நாட்டவும் சர்வதேச சகோதரத்திற்காகவும் போராடிய தோழர்கள் போராட்டக்காரர்கள் பொதுமக்கள் நிகரற்ற மனிதர்களே.

இவர்களுடைய தியாகம் மகத்தான மனித வாழ்வுக் காகவே நிகழ்ந்தது.

எனவே வன்முறையையும் மரணத்தையும் பூசிக்கும் கலாச்சாரத்திற்கு மாற்றாக வாழ்க்கையைச் சுடர்விடச் செய்யும் புதிய போராட்டப் பண்பாட்டை நிலை நாட்டுவோம்.

கத்தியின்றி யுத்தமின்றி மனிதாபிமானத்தின் அடிப் படையில் புதிய உலகத்தைப் படைக்கத் தயாராவோம்

கட்சியின் தலைவர் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் தோழர். இரா.துரைரெட்ணம் தலைமையில் மட்டக்களப்பு நகரில் தியாகிகள் தின ஊர்வலம்




கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் ஸ்ரீதரன், தோழர் அ.வரதராஜப்பெருமாள் மற்றும் தோழர்கள், ஆதரவாளர்கள் யாழ் போதனா வைத்தியசாலையில் இரத்ததானம்






சென்னை



யாழ்ப்பாணம்



ஜேர்மனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர் உபாலியின் நினைவுகள் நீடூழி வாழ்க

தோழர் உபாலி அவர்கள் மறைந்து சில மாதங்கள் உருண்டோடி விட்டன. ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவுக்காகவும், ஜனநாயகத்துக்காகவும், சமூக சமத்துவத்துக்காகவும் அவர் உன்னதமான பணியை ஆற்றியவர். ஓப்பீட்டளவில் கூடுதலாக, அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிட்டியவர்கள் என்ற வகையில் நாம் பெருமையடைகிறோம்.

தோழர் உபாலி கூரே அவர்கள் நினைவு கூரப்படும் இந்த நாள் எமது தோழர் அமரர் க.பத்மநாபா அவர்களின் பிறந்த நாளும் ஆகும். தோழர் பத்மநாபா அவர்களின் சர்வதேச நினைவு கூரல் கருத்தரங்குகளில் தோழர் உபாலி கூரே அவர்கள் எப்போதும் பிரதானமாக பங்குபற்றி உரையாற்றி இருக்கிறார். எமது கட்சியின் வளர்ச்சியிலும் இடதுசாரி ஐக்கியத்திலும் அவர் இடையறாது ஈடுபாடு காட்டி வந்திருக்கிறார். அவர் வெறும் வாய்ச்சொல் பங்களிப்பை வழங்கவில்லை. அவர் நடைமுறை ரீதியான பங்களிப்பையே வழங்கியிருக்கிறார். எமது பத்திரிகைகள், பிரசுரங்களை வெளிக் கொணர்வதிலும் அவர் பங்களித்திருக்கிறார். 1980 களின் இறுதிவாக்கில் மனித உரிமை ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக சர்வதேச ரீதியில் இணைந்து பணியாற்றி யிருக்கிறோம்.

தமிழ் மக்கள் மத்தியில் தலை தூக்கிய புலி பாசிசத்துக்கு எதிராகவும், ஜனநாயகத்துக்காகவும் நாங்கள் இணைந்து பணியாற்றியிருக்கிறோம். தோழர் உபாலி அவரின் சமூக அரசியல் பயணத்தின் வெவ்வேறு காலகட்டங்களில் அவர் இலங்கையின் முதலாவது அரசியல் கட்சியான லங்கா சமசமாஜ கட்சியில் தமது அரசியல் பயணத்தை ஆரம்பித்தவர். தோழர் கொல்வின் ஆர்.டி சில்வா, தோழர் என்.எம். பெரேரா, தோழர் எட்மன் சமரக்கொடி போன்ற உன்னத தலைவர்களுடன் பணியாற்றியவர். தோழர் பாலாதம்பு போன்றவர்களுடன இணைந்து புரட்சிகர லங்கா சமசமாஜ கட்சியை அமைத்தவர். தொழிற்சங்க இயக்கத்திலும் அவர் பணியாற்றியிருக்கிறார். இலங்கையின் இடதுசாரி கட்சிகளான லங்கா சமசமாஜ கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, இடதுசாரி ஜனநாயக முன்னணி உள்ளிட்ட கட்சிகளும், தமிழ் ஜனநாயக சக்திகளும் இணைந்து பணியாற்ற வேண்டுமென்ற கனவு அவரது அபிலாசையாக இருந்தது. வண பிதா போல் கஸ்பஸ் அவர்கள் தலைமையிலான அன்றைய நீதிக்கும் சமத்துவத்துக்குமான அமைப்பு உருவாக்கப்பட்ட காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான பயங்கரவாத சட்டம் கொண்டுவரப்பட்டிருந்தது. தமிழ் மக்களுக்கு எதிரான கலவரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. அரச பயங்கரவாதம் தலைவிரித்தாடியது. அது நக்ஸல்பாரிகளின் சதியென இடதுசாரிகளுக்கு எதிராகவும், தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிராகவும் அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன.

இக்காலப் பகுதியில் தோழர் உபாலி தனது சகாக்களுடன் யாழப்பாணத்திற்கு வந்திருந்தார். யாழ் நூலகம் தீக்கிரையாகி புகைந்து கொண்டிருந்த நேரம். யாழ்ப்பாண நகரத்தின் மீது புகை மண்டலம் சூரியனை மறைத்திருந்த நேரம். தோழர் உபாலி யாழ்ப்பாணத்தில் 'அரச பயங்கரவாதம்' என்ற பிரசுரத்துடன் வருகை தந்திருந்தார். நட்பின் செய்தியுடன் அவர் வந்திருந்தார். ஒடுக்கப்பட்ட மக்களின் நண்பனாக அவர் வந்திருந்தார்.


யாழ்ப்பாணத்தில் கட்டிடங்கள் மாத்திரம் எரிந்துக் கொண்டிருக்கவில்லை. மக்களின் மனங்களும் எரிந்து கொண்டிருந்தன. இந்த சூழ்நிலையிலும் இங்கு மனித உரிமைவாதிகளுடனும், தொழிற்சங்கத் தலைவர்களுடனும், அரசியல் கட்சிகளுடனும், இயக்கப் பிரதிநிதிகளுடனும் பல்கலைகழக மாணவர்களுடனும் நாம் என்ன செய்ய வேண்டும் என்ற கலந்துரையாடலை நடாத்தினார்.

எப்போதும் தன்னை முதன்மைப்படுத்தாத கனிவான மனிதாபிமானம் நிறைந்த வர்க்க உணர்வுடன் அவர் செயற்பட்டார்.

அவர் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேல் பணியாற்றிய ஜனநாயகத்துக்கும், நீதிக்குமான மத்திய நிலையம் மனித உரிமை தொடர்பாகவும் ஜனநாயகத்துக்காகவும் குறிப்பிடத்தகுந்த பணியை ஆற்றியுள்ளது.

தோழர் உபாலியின் தோழர்கள் எம்மைப் பொறுத்தவரை எமது இயக்கத் தோழர்களை போன்றவர்களே. அவ்வளவு நெருங்கிய பிணைப்பு எமக்குள் இருக்கிறது. எமது இன்ப துன்பங்களில் அவர்கள் உதவியிருக்கிறார்கள். எமது எத்தனையோ தோழர்கள் புலி பாசிசத்தினால் பலி கொள்ளப்பட்ட போது எமது மக்கள் சுனாமியால் அள்ளுண்ட போது எம்முடன் கரம் கோர்த்தவர்கள்.

**யாழ் நூலகம் தீக்கிரையாகி யாழ்ப்பாண நகரத்தின் மீது புகை மண்டலம் சூரியனை மறைத்திருந்த நேரம் தோழர் உபாலி தன் சகாக்களுடன் யாழ்ப்பாணம் வந்திருந்தார் "யாழ்ப்பாணத்தில் அரச பயங்கரவாதம்" என்ற பிரசுரத்துடன் அவர் வருகை தந்திருந்தார். அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் நண்பனாக அவர் வந்திருந்தார்.**



ஓவ்வொரு தடவையும் தோழர் உபாலி லண்டனிலிருந்து இங்கு வரும் போது தோழர் சுயாதீனமாக ஆதாரத்தை அடிப்படை கட்டுமானத்தை அமைக்கலாம் என்பது பற்றியே பேசுவார்.

அவர் சிறந்த கல்விமான் சட்ட வல்லுனர். மனித உரிமை வாதி அவர் செல்வ செழிப்புடன் வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவர் மிக மிக எளிமையான மனிதர். அவர் ஒரு சர்வதேசியவாதி. உலகின் ஒடுக்கப்பட்ட மக்கள் தொடர்பாக சோஷலிசத்தை அடைவது தொடர்பாக அவர் இடையறாது எங்களுடன் விவாதிப்பார்.

எப்போதும் எமக்கு மிக மிக பெறுமதி வாய்ந்த ஆலோசனைகளை வாஞ்சையுடனும் ஆர்வத்துடனும் வழங்கியிருக்கிறார்.

அவர் படிப்பு, அந்தஸ்த்து பார்த்து பழகும் மனிதரல்ல. தோழரே என்ற வார்த்தையுடன் சகல மட்டத்தில் உள்ளவர்களுடனும் இங்கிதமாக பேசுவார். அவரது கண்ணில் தீட்சண்யம் இருந்தது. சமரசமற்ற ஒரு வர்க்கப்ப போராட்டக் காரரின் மனோ தைரியம் இருந்தது.

அவருடைய மனைவியார் ஒரு ஸ்பானிய பெண்மணி அவர் ஸ்பானிய மொழியையும் கற்றுத் தேர்ந்தவர். தோழர் உபாலி அவர்களின் இழப்பு இட்டு நிரப்பப்பட முடியாதது. வரலாறு உருவாக்கிய மனிதர் அவர். நாங்கள் உபாலியின் தோழர்கள் என்பதில் பெருமிதம் கொள்கிறோம்.

புரட்சிகர சக்திகளின் ஐக்கியம் நீடூழி வாழ்க.

"உலகின் எந்தப் பகுதியில்
அநியாயம் இழைக்கப்பட்டாலும்
அதை மனப்பூர்வமாக
உணரக்கூடியவர்களாக இருந்தால்
நாம் அனைவரும் தோழர்களே!"

– சே –

# தியாகிகள் தின உறுதி ஏற்பு

- யுத்தம் காரணமாக விதவைகளாக்கப்பட்ட பெண்களினதும் தந்தை. தாய், சகோதரர்களை இழந்த உறவுகளினதும் உடல் ஊனமுற்றவர்களின் வாழ்வு வளம்பெற குரல் கொடுப்போம்.
- சிதைந்து போயுள்ள எமது பாரம்பரிய மனித விழுமியங்களை மீளக்கட்டியெழுப்ப மக்களை விழிப்படையச் செய்து ஸ்தாபனப்படுத்த உறுதிகொள்வோம்.
- ஆயுத வன்முறைகளிலிருந்தும், மறைமுகமான அழுத்தங்களிலிருந்தும் சமூகத்தை முழுமையாக மீட்டெடுப்பதற்கு அனைத்துச் சக்திகளையும் ஒன்று திரட்டி வன்முறைகளுக்கெதிராக குரல் கொடுப்போம்.
- யுத்தம் காரணமாக நலிவடைந்து போன கல்வியை மீண்டும் தொடர வீட்டுக்கொரு மாணவனை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற வைக்கவும், பட்டதாரிகளை உருவாக்கவும், இவர்களுக்கான தொழில்வாய்ப்பை பெற்றுக்கொடுக்கவும் எமது சமூக அமைப்புக்களையும் அரசியல் தலைமைகளையும் விழிப்படையச் செய்வோம்.
- எமது மாவட்டத்தில் இல்லாதொழிக்கப்பட்ட தனிமனித சுதந்திரத்தையும் ஜனநாயக பன்மைத்துவத்தையும் கட்டியெழுப்புவதோடு, சுதந்திரமாக செயற்படும் சமூகத் தலைமையை உருவாக்க உழைப்போம்.
- இயக்கங்களில் சேர்ந்து வன்முறை ஆயுதக்கலாச்சார மோகத்தால் கவரப்பட்ட சீரழிக்கப்பட்ட அப்பாவி இளைஞர் யுவதிகளின் வாழ்க்கை மீட்சி பெற அயராது உழைப்போம்.
- யுத்தம் காரணமாக சேதமாக்கப்பட்ட, சிதைந்து போன, அழிக்கப்பட்ட உயிர்கள், உடமைகள் விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு சிறுகைத்தொழில் கல்வி கலாச்சாரம் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப உறுதுணையாக இருப்பதுடன் அரசையும் நிதி நிறுவனங்களையும் கோருவோம்.
- எமது தமிழ் பேசும் மக்களின் அதிகாரப் பரவலாக்கலை அரசு உறுதிப்படுத்தும் வரை தொடர்ந்து இடித்துரைப்போம்.
- எமது மாவட்டத்தில் தமிழர்கள் பிரதிநிதித்துவத்தை இழக்க வைப்பதற்குப் போடப்படுகின்ற சதியை உடைத்தெறிய அரசியல் கட்சிகளையும், தமிழ் சமூக தலைமைகளையும் விழிப்படையச் செய்து ஓரணியில் அரசியல் பலத்தை நிரூபிப்பதற்கு முன்னின்று உழைப்போம்
- எமது நாட்டில் எத்தரப்பினராலும் மீறப்படுகின்ற அடிப்படை மனித உரிமை மீறல்களைத் தடுத்து நிறுத்தக் குரல் கொடுப்போம்.

பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் மட்டக்களப்பு -அம்பாறை மாவட்டம்

# தியாகிகள் தின உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

தியாகிகள் தினத்தை முன்னிட்டு யாழ் உதைபந்தாட்ட லீக்கின் நெறிப்படுத்தலுடன் பத்மநாபா ஈபிஆர்எல்எவ் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த 19.06.2010 முதல் நடைபெற்றுவருகின்றது. முதற்சுற்று போட்டிகள் சுண்ணாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இரண்டாவது சுற்று உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

| | |
|---|---|
| 01 பாடும் மீன் வி.கழகம், குருநகர் | 14 விக்னேஸ்வரா வி.க, புத்தூர். |
| 02 கலைவாணி வி.க, நாவாந்துறை. | 15 ரெட் ரேஞ்சர் வி.க, மானிப்பாய். |
| 03 அன்ரனீஸ் வி.க, மணற்காடு. | 16 சென் அரன்ரனிஸ் வி.க, பாஷையூர் |
| 04 ஞானமுருகன் வி.க, மயிலங்காடு. | 17 வளர்மதி வி.க, அச்செழு. |
| 05 கரணவாய் மத்தி விளை. கழகம். | 18 சென் பீற்றர்ஸ் வி.க, நவாலி. |
| 06 நாமகள் வி.க, தெல்லிப்பளை. | 19 யாழ் ஐக்கிய வி.கழகம். |
| 07 எவரெஸ்ட் விளை. கழகம் புத்தூர். | 20 டைமன்ட் வி.க, வதிரி. |
| 08 சென் மைக்கல் வி.க,உரும்பிராய். | 21 நவசக்தி வி.க, கரவெட்டி. |
| 09 கலைமதி வி. கழகம், புத்தூர். | 22 யூனியன் வி.க, ஆனைக்கோட்டை. |
| 10 சென்மேரிஸ் வி.க, நாவாந்துறை. | 23 மனோகரா வி.க, அல்வாய். |
| 11 இமையாணன் மத்தி. வி.கழகம். | 24 யங் கென்றீஸ் வி.க, இளவாலை. |
| 12 நியு ஸ்ரார் வி.க. சுண்ணாகம். | 25 றோயல் வி.க, ஊரெழு. |
| 13 சென்.சேவியர் வி.க. சக்கோட்டை. | 26 ஐக்கிய வி.க. கலட்டி. |

ஆகிய 26 விளையாட்டுக் கழகங்கள் போட்டியில் பங்கேற்றுள்ளன.

யாழ் உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் மு. பிரான்சிஸ், போட்டி குழு செயலாளர் செ.கனியூட், தமிழ்ச்செல்வன் ஆகியோர் போட்டிகளுக்கு கண்காணிப்பாளர்களாகவும் யாழ் உதைபந்தாட்ட லீக்கின் போட்டி குழுத் தலைவர் ஏ. சுரேந்திரன், மற்றும் ஆனந்தராஜா, கிருபா, ஜெனி, அஜித், யோகலிங்கம் ஆகியோர் போட்டிகளின் மத்தியஸ்தர்களாகவும் செயற்பட்டு வருகின்றனர்.



சுண்ணாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்திற்கு விஜயம் செய்த முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாண முதல்வர் தோழர் அ.வரதராஜப் பெருமாள், கட்சியின் பொதுச்செயலாளர் தி.ஸ்ரீதரன் ஆகியோர் விளையாட்டு கழகம் ஒன்றின் வீரர்களை கைலாகு கொடுத்து வாழ்த்துகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு என்ன?

பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் தி.ஸ்ரீதரன் வீரகேசரி வார வெளியீட்டிற்கு வழங்கிய செவ்வியிலிருந்து

**கேள்வி: தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும், அதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் தான் பேச்சுவார்த்தை நடத்தத் தயாரென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் தெரிவித்துள்ளார். இதேவேளை, 13 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலமான மாகாணசபை முறையை இதற்கு ஆரம்பமாகக் கொள்வது நல்லதெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் உங்கள் கருத்து என்ன? தமிழ் மக்களின் பிரச்சினைக்கான இறுதித் தீர்வு எவ்வாறு அமைய வேண்டுமென நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?**

பதில்: தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு தமிழ் கட்சிகள் அனைத்தும் இணைந்து பணியாற்ற வேண்டும் என்பதில் எமக்கு மாறுபட்ட கருத்து இல்லை. அது மிகவும் அவசியமானதும் கூட. தீர்வு விடயத்தில் கருத்தொருமிப்பை உருவாக்குவதற்கு இதயபூர்வமான அர்ப்பணத்துடன் கூடிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கற்பனைகளில் மூழ்கி விடாமல் யதார்த்தபூர்வமான தீர்வுக்கு நாம் முயற்சிக்க வேண்டும்.

13வது திருத்தச் சட்ட மூலத்திற்கு சரியான முறையில் விளக்கமளித்து அது அமுல்படுத்தப்படுவது நல்லதொரு ஆரம்பம் என்பதில் எமக்கு மாறுபட்ட கருத்து இல்லை.

13வது திருத்தத்தை முடிந்தளவுக்கு மாகாணசபைகளுக்கு சார்பாக விளக்கம் அளிக்கும்படி அதிகாரம் கொண்ட ஆணைக்குழுவொன்று ஜனாதிபதியால் கட்சி சார்பற்ற நிபுணர்களை கொண்டு அமைக்கப்படல் வேண்டும். இந்த ஆணைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலேயே அதிகாரப்பகிர்வின் நடைமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மதிப்புக்கூட்டு வரி உட்பட விற்பனை வரிகள், மதுபான வருமான வரிகள், சொத்துமாற்ற வரிகள் போன்றன உட்பட மாகாணசபைகளின் வரி வருமானங்கள் என 13வது திருத்தத்தில் உள்ள 19 வகை வருமானங்களும் திரட்டப்பட்டு காலதாமதமின்றி மாகாண ஆட்சிகளுக்கு உரியபடி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

அரசாங்க அதிபர்கள் உட்பட பொது நிர்வாக அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் அந்தந்த மாகாண ஆட்சிகளின் நிர்வாகங்களுக்கு உட்பட்டவர்களாக ஆக்கப்படல் மத்திய அரசுக்கு உட்பட்டதென திட்டவட்டமாக கூறப்பட்டவை தவிர ஏனைய அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் வைத்திய சேவைகளின் அபிவிருத்தி நிர்வாகமும் மேலும் சுகாதாரம், மருந்துகள் தொடர்பான அதிகாரங்களும் தலையீடு அற்ற வகையில் மாகாண அரசுகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மாகாண பொலிஸ் பிரிவானது மாகாணசபையின் சட்டங்களுக்கும் மாகாண முதலமைச்சரின் கட்டளைகளுக்கும் கீழ்படிவாக செயற்பட வேண்டுமென்ற நிர்வாக ஏற்பாடொன்றை ஜனாதிபதி மேற்கொள்ள வேண்டும். அத்துடன் மாகாண மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும்.

காடு மற்றும் அரச நிலங்களின் பாவனை தொடர்பாக மத்திய அரசு மேற்கொள்ளும் சுற்றுசூழல் கொள்கைகளுக்கு அமைய மாகாண அரசுகளே நிலப்பாவனை நில நிர்வாகம் நில அபிவிருத்தி நிலப்பகிர்வு அரச நிலங்களில் குடியேற்றங்கள் மற்றும் காட்டு வளங்கள் பற்றிய விடயங்களில் முழுமையாக நிறைவேற்று அதிகாரம் கொண்டிருக்க வகை செய்ய வேண்டும்.

தேர்தல் நடத்துவதை தவிர உள்ளூராட்சி அமைப்புக்கள் தொடர்பான அனைத்து அதிகாரங்களும் மாகாண ஆட்சிகளுக்கு உட்பட்டவையே என்பது உறுதியாக நிலைநாட்டப்பட வேண்டும்.

நாட்டின் பாதுகாப்பு ஒருமைப்பாடு வெளிநாட்டு உறவு, கப்பல் துறை, மற்றும் துறைமுகங்கள், விமானங்கள், விமான நிலையங்கள் ரயில்வே மத்திய நிதி நிர்வாகம், வங்கிகள், தொலை தொடர்புகள், தொலைகாட்சிகள், மற்றும் வானொலி கட்டுப்பாடுகள், வெளிநாட்டு வர்த்தகம் போன்ற நாடு தழுவிய மற்றும் தேசிய விடயங்கள் தவிர ஏனைய விடயங்கள் பெரும்பாலும் மாகாணசபைகளால் நிறைவேற்றப்படுபவையாக இருக்க வேண்டும்.

13வது திருத்தச் சட்டமூலத்தை சரியான முறையில் அர்த்தப்படுத்தி அதனை அமுல்ப்படுத்துவதானால் மேற்கூறியவாறே அதிகாரங்கள் பகிரப்படல் வேண்டும்.

ஒரே நேரத்தில் எல்லாம் நிகழும் என்று எதிர்பார்க்காவிட்டாலும் 13வது திருத்தத்தை சரியான முறையில் அமுல்ப்படுத்துவது இவ்வாறே அமைய வேண்டும்.

இறுதித் தீர்வு என்பது தமிழ் மக்கள் மாத்திரமல்ல முஸ்லீம், மலையக தமிழ் பேசும் சமூகங்கள் சிங்கள மக்களுடன் சமத்துவமான பங்காளர்களாக வாழ்வதாக மானசீகமாக உணர்வதற்கான நிலைமைகளை ஏற்படுத்துவதே. அதாவது இந்த நாட்டின் எண்ணிக்கையில் சிறுபான்மையான சமூகங்கள் தாங்கள் இலங்கையின் அரசாங்க முறைமையின் பங்குதாரர்கள் என்று உணரும் நிலைமையை ஏற்படுத்துவதே தற்போதைக்கு இறுதித் தீர்வாக அமையலாம்.

> 13 வது திருத்தச் சட்ட மூலத்திற்கு சரியான முறையில் விளக்கமளித்து அது அமுல்படுத்தப்படுவது நல்லதொரு ஆரம்பம் என்பதில் எமக்கு மாறுபட்ட கருத்து இல்லை ஒரே நேரத்தில் எல்லாம் நிகழும் என்று எதிர்பார்க்காவிட்டாலும் 13 வது திருத்தத்தை சரியான முறையில் அமுல்ப்படுத்துவது இவ்வாறே அமைய வேண்டும்.

---

*ஜே.நிர்மலன், பளை*

**வடக்கு- கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் சமீபத்தில் யாழில் நடாத்திய அரசியல் கூட்டங்களிலும், கலந்துரையாடல்களிலும் தெரிவிக்கும் கருத்துக்கள் இலங்கை தமிழ் தினசரிகளில் செய்திகளாகவும், கட்டுரைகளாகவும் பிரசுரிக்கப்படுவதை கவனித்தீர்களா?**



பார்த்தேன் - மகிழ்ச்சியாக இருந்தது! புலிகளின் வீழ்ச்சிக்கு முன்னர், அவர்களின் வன்முறைகளுக்குப் பயந்து, பணிந்து மாற்றுக் கருத்துக்களை இருட்டடிப்புச் செய்வது அல்லது அவ்வாறு கருத்துத் தெரிவிப்பவர்கள் தலையெடுக்க முடியாதவாறு வியாக்கியானங்களை எழுதி அக்கருத்துக்கள் மக்களை சென்றடையாதவாறு முடக்குவது போன்ற பத்திரிகை தர்மத்திற்கு புறம்பான செயற்பாடுகள் தமிழ் பத்திரிகைத்துறையில் விரவிக் காணப்பட்டன. இப்போதைய மாற்றம் உக்கிரமான வெய்யிலின் பின்னர் தென்றல் காற்றை அனுபவிப்பது போன்ற இதமான உணர்வைத் தருகின்றது. இது தொடர வேண்டும்.

*வ. சங்கரப்பிள்ளை, சாவகச்சேரி*

**இந்த கொடூரமான அழிவுகள் இலங்கையில் தமிழர்களுக்கு ஏற்படுமென நீங்கள் எப்பொழுதாவது நினைத்தீர்களா ?**



1970ம் ஆண்டுகளின் நடுப்பகுதி, அப்பொழுது ஆபிரிக்காவில் Biafra (ப்பயவ்ரா) என்ற நாட்டில் தனிநாடு கோரி ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அந்த நாட்டு மக்களுக்கு தலைமை தாங்கி வழிநடாத்தியவர்களின் தவறான அணுகு முறைகளினால் போராட்டம் படுதோல்வியுற்றுப் போனதுடன் பல்லாயிரக்கணக்கான மக்கள் அனைத்தையும் இழந்து நிர்க்கதியான நிலைமைக்கு ஆளாக்கப்பட்டனர்! அப்பொழுது, ஈரோஸ் (EROS) அமைப்பின் ஸ்தாபகரும், ஈழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பத்தில் போராட்டம் பற்றிய தத்துவார்த்தமான கண்ணோட்டத்திற்கு அடித்தளம் இட்டும், பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்துடன் (PLO) தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களுடைய பாசறைகளில் இயக்கங்களை சேர்ந்த சில இளைய தலைவர்களும், போராளிகளும், அரசியல் அறிவும் ஆயுதப் பயிற்சிகளும் பெறுவதற்கு ஒழுங்குகள் செய்தவருமான அமரர் இரத்தினசபாபதியுடன் ('ரட்ணா') ஈழவிடுதலை சம்பந்தமாக நான் அளவளாவிய சந்தர்ப்பங்களில் ஒரு முறை அவர் கூறிய வார்த்தைகள் :—

"நாம் வெகு கவனமாகவும், மிகுந்த பொறுப்புடனும், மக்கள் மீது உண்மையான கரிசனையுடனும் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். இந்த ஆயுதப் போராட்டம் குறுந் தேசிய வாதிகளாலும், நடுத்தர வர்க்கநலன் மட்டுமே கருதுபவர்களாலும், தமிழர் மத்தியில் இருக்கும் இனவாதிகளாலும், பதவி மோகம் கொண்டவர்களாலும் கடத்தப்பட்டுத் திசை திருப்பப்படுமானால; Biafra இல் நடக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களின் பயங்கர அழிவுகள் போல் எமது மக்களுக்கும் ஏற்பட்டுவிடும். எமது தமிழ்மக்களை இப்பொழுது இருக்கும் நிலைமையை விட படு மோசமான நிலைமைக்குத் தள்ள வழி கோலி, ஈழத் தமிழர்கள் தலைதூக்க முடியாத தாழ்ந்த நிலைக்குக் கொண்டு போய்விடும்.- இது எம்மை நம்பி வந்த மக்களுக்கு நாம் செய்த மாபெரும் துரோகமாக மாறி விடும்!"

நினைவை மீட்கிறேன், எவ்வளவு தீர்க்கதரிசனமான வார்த்தைகள்! எங்கிருந்தோ 'ரட்ணா', "சொன்னேனே-கேட்கவில்லையே!" எனக் குமுறுவது போன்ற பிரமை!

## அபிமன்யு பதில்கள்

அந்த வார்த்தைகள் முன்னெப்பொழுதையும் விட இப்பொழுது என் காதுகளில் இன்னமும் அதிகமாக ரீங்காரமிட்டு அலைக் கழிக்கிறது!

*தா.ஜயாத்துரை, வட்டுக்கோட்டை*

**தமிழ் தேசிய கூட்டமைப்பினரின் இந்திய விஜயம் இம்முறையாவது பயனளிக்குமா ?**

அந்த விஜயத்தின்போது இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங் அவர்களை, சம்பந்தர், மாவை, சுரேஷ், செல்வம், சுமந்திரன், விநாயகமூர்த்தி ஆகியோர் அடங்கிய தமிழ் தேசிய கூட்டமைப்பு குழுவினர் சந்தித்த பின்னர் சம்பந்தர் பின்வருமாறு கூறியுள்ளார்.

*"சுயமரியாதை, சுயகௌரவம் மற்றும் பாதுகாப்புடன் தமிழ் மக்கள் வாழ்வதற்கு ஏற்ற வகையில் நியாயமான அரசியல் தீர்வைக் காண இந்தியா சகல முயற்சிகளையும் எடுக்கும் என இந்தியா உறுதியளித்துள்ளது"*

இங்கு எதை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் புதிதாக கண்டுகொண்டார்கள் என்று உண்மையாகவே எனக்குத் தெரியவில்லை! மேற்படி நிலைப்பாட்டினை இந்திய அரசு ஏறத்தாழ கடந்த இருபது ஆண்டுகளாக தொடர்ச்சியாக தெரிவித்து வருகின்றது. ஆனால், அந்த "நியாயமான அரசியல் தீர்வு" என்ன என்ப [illegible] துவப்படு

சுயநிர்ணய உரிமை", "தமிழ் தேசியம்", "தனித் தமிழ் ஈழம்", "சமஷ்டி", "அதிகாரப் பரவலாக்கம்", "சிங்கள எதேச்சாதிகாரம்" என்று பாராளுமன்றக் கதிரைகளை தங்கள் வசம் வைத்திருப்பதற்கான வார்த்தைப் பிரயோகங்களுக்கு அப்பால், சாத்தியமான "நியாயமான அரசியல் தீர்வு" என்ன? அதன் உள்ளடக்கங்களாக குறிப்பாக எவற்றினைக் கொண்டிருக்க வேண்டும். என்ற கேள்விகளுக்கான விடைகளை இப்பொழுதும் கூட தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தெளிவாகவும், திட்டவட்டமாகவும், வெளிப்படையாகவும் தெரிவிக்கவில்லையே! வெறும் வார்த்தை முழக்கங்களுக்குள் மறைந்து கொண்டு தமிழ் மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றாமலும், குழப்பங்களுக்குள்ளாக்காமலும், இதற்கான விடைகளை தெளிவாகவும், திட்டவட்டமாகவும், வெளிப்படையாகவும் தெரிவிக்க வேண்டியது தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் கடமையாகும். அதற்கான நேரடியானதும், காத்திரமானதுமான அழுத்தங்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு கொடுப்பது தமிழர்களின் உரிமையும், கடமையும் ஆகும்.

*சா.நகுலராஜா, யாழ்ப்பாணம்*

**"கடல் கடந்த தமிழீழ அரசு" என்றும் "வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில் புலம்பெயர்ந்து மேற்கத்தைய நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் தனித் தமிழ் ஈழத்திற்கான வாக்கெடுப்பு" என்றும் வெளிநாடுகளில் செயற்படுபவர்கள் பற்றி?**

இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் இன்றைய இன்னல்களுக்கும் பாரிய அவலங்களுக்கும் முட்கம்பி வேலிகளின் அடைப்புகளுக்குள்ளும் ஆட்படுவதற்குக் காரணமாக இருந்த புலிகளின் பினாமிகளே, வேறு முகமூடிகளிலும், வேஷங்களிலும், இந்த நாடகங்களை மேடையேற்றுகிறார்கள். இலங்கைத் தமிழர்களின் பெயரால் பணம் பெருக்கிய பெருச்சாளிகளும், சமூக அந்தஸ்தைப் பெற்றவர்களும், தமது செல்வத்தையும், செல்வாக்கையும்



தக்கவைத்துக் கொள்வதற்கும், சொத்துக்களைத் தமக்குள்ளே பங்கிடுவதற்கும், மேலும் பெருக்குவதற்குமான முயற்சிகள் இவை! அத்துடன் ஒரு பொழுது போக்கு!- அவ்வளவுதான்!!

தமிழர்களின் நியாயமான அரசில் அபிலாஷைகளைத் தீர்க்க இவை வழி சமைக்காது என்பதோடு, இடம்பெயர்ந்தோர் அனைவரையும் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியேற்றாது இருப்பதற்கு 'புலிகள் இன்னமும் முற்றாக அழிக்கப்படவில்லை' என்ற ஒரு சாக்கை அரசாங்கம் சொல்வதற்கும், தமிழ்ப் பிரதேசங்களில் இலங்கை இராணுவம் தொடர்ந்தும் நிலை கொண்டிருப்பதற்கும் இவர்களும் காரணிகளாக இருக்கிறார்கள். இத்தகைய நடவடிக்கைகள், இலங்கையில் வாழும் தமிழர்களை மேலும் இன்னல்களுக்குள்ளாக்கவே வழிவகுக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கட்சிகளின் ஒற்றுமைக்கு சம்பந்தர் அழைப்பு

தமிழ்க்கட்சிகளுக்கிடையில் ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ள சம்பந்தர் ஒரு நிபந்தனையையும் விதித்துள்ளார். அதாவது, அந்த ஒற்றுமையில் டக்ளஸ் தேவானந்தாவுக்கு இடமில்லை என்பதுவே அதுவாகும். டக்ளஸ் சம்பந்தமான விடயம் ஒரு புறமிருக்க, இந்த அழைப்புத் தொடர்பாக சில விடயங்களை நாம் சுருக்கமாக ஆராய வேண்டியுள்ளது: அது தொடர்பாக எமக்கு சில கேள்விகளும் எழுகின்றன.

இந்த அழைப்பு சம்பந்தரின் தனிப்பட்ட அபிப்பிராயமா அல்லது அவர் தலைமை வகிக்கும் தமிழரசுக் கட்சியின் அபிப்பிராயமா என்பது தெளிவாக இல்லை. புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நான்கு துண்டுகளாக உடைந்து கடந்த தேர்தலில் ஒருவர் மீதொருவர் சேற்றைப் பூசிக்கொண்டு நிற்கின்றனர். புலி ஆதரவு வெளிநாட்டவரின் அபிமானத்தினைப் பெற்றுள்ள இந்த நான்கு அணியினரும் ஒற்றுமைப் படுவதற்கான ஏன் ஒரு மேசையில் உட்கார்ந்து ஆளையாள் முகம் பார்த்துப் பேசுவதற்கான சுமுகமான நிலைமையை கூட இழந்து போயிருக்கிறார்கள்.

எனவே சம்பந்தரின் அழைப்பில் தம்மிலிருந்து பிரிந்து சென்ற - விலக்கிவிடப்பட்டுப் போன கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கட்சியும் சிவாஜிலிங்கம் சிறிகாந்தா கட்சியும் இந்த அழைப்பில் விலக்கப்பட்டவர்களா அல்லது அவர்களும் இந்த அழைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளார்களா? சம்பந்தர் அழைத்தாலும் அவர்கள் வருவார்கள் என்பது கேள்வியாக உள்ளது.

சம்பந்தரின் அரசியல் பார்வையில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சமசமாஜக் கட்சிகளின் தமிழர் பகுதிப் பிரதிநிதிகளையோ அல்லது சிறுபான்மைத் தமிழர் முன்னணியினரையோ தமிழர்களின் கட்சியினர் என்று கருதியிருப்பார் என நாம் கருதுமளவிற்கு கடந்த காலச் செய்ற்பாடுகள் எதுவுமில்லை. எனவே அவர்களும் சம்பந்தரின் அழைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்க மாட்டார்கள் எனக் கொள்ளலாம்.

ஆக மிஞ்சியிருப்பது பத்மநாபா ஈபிஆர்எல்எவ், புளொட் மற்றும் ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் கூட்டணி. இந்தக் கட்சிகளில் எதுவும் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கவில்லை. இவற்றில் எவரோடும் பேச வேண்டும் அல்லது ஒற்றுமைப்பட வேண்டும் என்ற உடனடி கட்டாயத் தேவை தமிழரசுக் கட்சியினருக்கு இருப்பதாகத் தெரியவில்லை. அப்படியிருக்க இந்த அழைப்பின் அவசியம் என்ன? அழைப்பிலுள்ள அர்த்தம் தான் என்ன?

அரசாங்கம் டக்ளஸையும், கிஷோரையும், கருணாவையும் வைத்துக் கொண்டு தமிழர்களின் தலைமையின் ஒரு பகுதி தங்களோடும் இருக்கிறது என்று சொல்வது போல தமிழர்களின் தனித் தலைமை தாமே என்று சொல்வதற்காக சம்பந்தரும் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் அற்ற சில கட்சிகளும் தம்மோடு இணைந்து நிற்கின்றன என்று காட்டினால் பயனுடையதாக இருக்கும் என்பதற்காக இந்த அழைப்பை விடுத்துள்ளாரா?



தமிழர்களின் கட்சிகளுக்கிடையில் ஓர் ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்று தமிழர்கள் மத்தியில் பரவலான ஒரு அபிப்பிராயம் இருப்பது உண்மையே. அவர்களைத் தற்காலிகமாக திருப்திப்படுத்துவதற்காக இந்த அழைப்பா? இந்தியத் தலைவர்கள் தமிழர்களின் கட்சிகள் மத்தியில் ஒற்றுமை ஏற்படுவது அவசியம் என்று வலியுறுத்தி வருகின்ற படியால் அவர்களுக்கு தண்ணி காட்டுவதற்காக இந்த அழைப்பா? அல்லது எதிர்வர விருக்கும் வடக்கு மாகாணசபைத் தேர்தலின் போது தமிழரசுக் கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்காவிட்டால் அப்போது ஒரு சில பிரதிநிதித்துவத்தைப் பெற்றிருக்கக் கூடிய சிறு கட்சிகளோடு முன்கூட்டியே ஒரு உடன்பாட்டு மாயையை ஏற்படுத்தி வைத்திருந்தால் அது தேவைப்படும் போது பயன்படும் என்பதற்கான முன்னெச்சரிக்கை முயற்சியா? அல்லது வெளிநாடுகளிலுள்ள புலி முகவர்கள் கூட்டம் எந்த நேரமும் தமது காலைவாரிவிடும் என்ற பயத்தில் அதற்கு மாற்றான ஒரு அரசியல் அங்கீகாரத் தளத்தை முன்கூட்டியே தயாராக வைத்திருப்பதற்கான தந்திரமா? என பல கேள்விகள்

இவ்வாறு குறுக்கால போற கேள்விகளெல்லாம் ஏன் எழுகின்றன என்பதற்கு இங்கே விளக்கங்கள் தேவையில்லை. அவற்றிற்கு கடந்த காலம் நிறையவே சான்றுகளைக் கொண்டிருக்கின்றது.

இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை எட்டுவதற்கு- அதனை வலுவாக கோருவதற்கு என்ற நோக்கத்தில் இந்த அழைப்பை விட்டிருப்பதாகத் தெரியவில்லை. அதைப்பற்றி எதுவுமே குறிப்பிடப்படவுமில்லை. எதைக் குறிக்கோளாகக் கொண்டது இந்த அழைப்பு என்பது தெளிவாக இல்லை.

தமிழர்களின் அரசியல் அபிலாஷைகள் மற்றும் உடனடியான பிரதானமான பிரச்சினைகள் தொடர்பாக ஒரு பொது அபிப்பிராயத்தை உருவாக்குதற்காகவே இந்த அழைப்பு என்றால் வரவேற்கலாம்.

அல்லது, தமிழரசுக்கட்சிக் காரர்களாகிய தாங்கள் ஒரு தீர்வுத் திட்டத்தை தயாரித்து வைத்திருந்தால் அதன்மீது ஏனைய தமிழ் தலைவர்கள் பிரமுகர்களின் கருத்தை அறிவதற்காகவே அவர் இவ்வாறானதொரு அழைப்பை விடுப்பதாகத் தெளிவாகக் கூறியிருந்தாலும் அதை வரவேற்காலாம்.

ஏன் மற்றவர்களின் அபிப்பிராயத்தைக் கூட கேட்க வேண்டாம் தாம் தீர்மானித்த தீர்வுத் திட்டத்தை மற்றவர்களுக்கும் அறிவிக்க ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்வதாகக் கூறினாலும் ஒரு அர்த்தமிருக்கும்.

இப்படி எதுவுமே இல்லாமல் பொத்தாம் பொதுவாக தமிழர்களின் ஒற்றுமைக்கு அழைப்பு என்று விடப்படும் பத்திரிகை அறிக்கையை ஒரு பொதுஜன ஸ்டண்ட் ஆக மட்டுமே பார்க்க நேரிடும் என்பதைப் புரிந்து கொண்டு தமது அழைப்பின் நோக்கங்களையும் சரியான அர்த்தங்களையும் சம்பந்தர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். அப்போது தான் ஏனைய கட்சிகளும் தெளிவாக தத்தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்க முடியும், அப்போது தான் பரந்துபட்ட தமிழ் மக்களுக்கு இடையில் இந்த ஒற்றுமை அழைப்பு தொடர்பாக ஒரு சரியான தெளிவான அபிப்பிராயம் ஏற்பட முடியும்.

---

# ஐக்கியம் : எமது நோக்கு

கடந்து வந்த மூன்று தசாப்தங்களில் தமிழ் அரசியல் சக்திகள் மத்தியில் ஐக்கியம் வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஏகபிரதிநிதித்துவ கருத்தியல் ஆதிக்கம் பெற்றதன் பின்னர் ஐக்கியம் என்பது தவறுகள் எதனையும் சுட்டிக்காட்டாமல் புலிகளின் பாதையினை தொடர வேண்டும் என்ற கருத்தே செல்வாக்குப் பெற்றிருந்தது. அதன் ஏகபிரதிநிதித்துவ ஜனநாயக விரோதத் தன்மை கேள்விகளுக்குள்ளாக்கப்படுவது அரிதாகவே இருந்தது.

சகோதர படுகொலைகள் தீவிரமாக அரங்கேறுவதற்கு முன்னர் ஐக்கியம் ஏதோவொரு அளவில் உருவாகியது உண்மையே. அது நீர்க்குமிழி போன்ற தோற்றத்தை உடையதாக இருந்தது. 1980 களின் நடுப்பகுதியில் திம்பு பேச்சுவார்த்தைகளின் போது த.வி.கூ, ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, ஈரோஸ், எல்.ரி.ரி.ஈ ஆகியன இணைந்து ஈ.என்.எல்.எப் என்ற அமைப்பை உருவாக்கியிருந்தன. திம்பு பேச்சுவார்த்தைகளில் இக் கூட்டமைப்பும் தமிழீழ மக்கள் விடுதலை கழகமும் இணைந்தே பங்குபற்றின.

எனினும் புலிகள் மற்றவர்களின் ஜனநாயக உரிமைகளை நிராகரித்ததால் இந்த ஐக்கியம் நீடிக்கவில்லை.

இக்காலகட்டத்திற்கு பின்னரும் அவ்வப்போது ஐக்கிய முன்னணிகள் உருவாகின. 1987 இல் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் ஜனநாயக வழிக்கு வந்த இயக்கங்கள் அரசியல் கட்சிகளுக்கிடையே ஐக்கியத்தை கட்டியெழுப்பும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் தோழர் பத்மநாபாவின் பங்களிப்பை எவரும் மறுதலிக்கமாட்டார்கள்.

இதேவேளை சிங்கள மக்கள் மத்தியிலுள்ள முற்போக்கு சக்திகள், மலையக அரசியல் சமூக தலைமைகள், முஸ்லீம் மக்களின் தலைவர்களுடன் உறவுகளை பேணியதோடு முற்போக்கான இளம் தலைமுறையொன்றை ஊக்கப்படுத்துவதிலும் பங்களித்தார்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கும் ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கும் குறிப்பாக பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலை கழகம், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகள் சமகாலத்தில் இணைந்து செயற்பட்டிருக்கின்றன.

தற்போது ஐக்கியத்திற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போதைய யதார்த்தம் சூழ்நிலைகளுக்கேற்ப பரந்தளவிலான ஐக்கிய முன்னணி ஒன்று காலத்தின் கட்டாய தேவையாக இருக்கிறது.

30 வருடங்களில் இலங்கையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கும் சமூகங்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவதிலும் பல பாரிய பின்னடைவுகளை சந்தித்திருக்கிறோம். பேரழிவுகளை தவிர்த்து உரிமைகளை வென்றெடுத்து சமத்துவமாக வாழக்கூடிய பல சந்தர்ப்பங்களை நாங்கள் இழந்திருக்கின்றோம்.

ஓரளவு ஜனநாயக இடைவெளி எட்டப்பட்டிருந்தாலும் எமது மக்கள் எதனை பெற்றிருக்கிறார்கள் என்று எண்ணும் போது மிகுந்த மன வேதனையே மிஞ்சுகிறது.

ஏற்கனவே உயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்தும் சாதாரண வாழ்விடங்களில் இருந்தும் இடம் பெயர்ந்து அகதிகளான மக்கள் மீளக்குடியேறாத நிலையில் இறுதியாக இடம்பெயர்ந்த வன்னி மக்கள் சொல்லொணா வேதனைகளையும் பேரிடர்களையும் எதிர்கொண்டு தமது சொந்த இடங்களில் குடியேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் பலரின் பிள்ளைகள் சிறப்பு முகாம்களில் வாழ்கிறார்கள்.

இந்த மக்கள் சுதந்திரமாகவும், கௌரவமாகவும் தத்தமது பிரதேசங்களில் வாழ்வதற்கு ஏற்பாடு செய்வதோடு அரசியல் அதிகார பகிர்விற்கும் இன சமூகங்களுக்கிடையே ஐக்கியத்திற்கும் வழி சமைக்கப்பட வேண்டும்.

வடக்கு கிழக்கில் வாழ்ந்த தமிழ் மக்களே பிரதானமாக பாரிய அழிவுகளை சந்தித்திருந்தாலும் மலையக மக்களும், முஸ்லீம் மக்களும் கடந்த 30 ஆண்டுகளில் அழிவுகளை எதிர்கொண்டு இருக்கிறார்கள். சிறுபான்மை சமூகங்கள் பலவீனமான நிலையிலேயே இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே நாம் சிறுபான்மை சமூகங்களிடையே தமிழ் பேசும் மக்களிடையே ஒரு புரிதலை ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டும். இது வரலாற்று அவசியமும் கூட எண்ணிக்கையில் சிறுபான்மையான தேசிய சமூகங்கள் என்ற வகையில் எமது சமூகங்களின் பிரச்சினைகளை புரிந்து கொள்ளவும் இந்த சமூகங்களின் தலைவர்கள் நெருக்கமாக செயற்படவும் முன்வர வேண்டும். எனவே ஐக்கியம் என்பது சகல சிறுபான்மை சமூகங்களையும் உள்ளடக்குவதாக அமைய வேண்டும்.

தனியே வடக்கு கிழக்கு தமிழ் அரசியல் தலைமைகளின் ஐக்கியம் பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் அநாவசியமான சந்தேகங்களுக்கு இடமளிகலாம். சிங்கள மக்கள் மத்தியிலுள்ள முற்போக்கு அரசியல் தலைமைகளுடனும் நாம் இணைந்து செயற்படுவதன் மூலமாகவே புரையோடிப்போன எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

சாதாரண சிங்கள மக்களின் ஆதரவில்லாமல் சிறுபான்மை சமூகங்களிடையே ஐக்கியம் இல்லாமல் நாம் இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதோ, நாட்டில் ஜனநாயகத்தை கட்டியெழுப்புவதோ சமூகங்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவதோ சாத்தியமில்லை என்ற யதார்த்தத்தை நாம் புரிந்து கொள்ள தலைப்பட வேண்டும்.

அதேபோல் இந்த நாட்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியா இலங்கை, சர்வதேச சமூகம் தமிழக அரசியல் தலைமைகள் இலங்கை தமிழ் பேசும் தலைமைகள், சிங்கள முற்போக்கு அரசியல் தலைமைகள் இணைந்து செயற்படும் ஒரு போக்கை ஆதரிக்க வேண்டும்.

எனவே ஐக்கியம் என்பது வெறும் அகண்ட தமிழ் ஐக்கியமாக இல்லாமல் குறுந்தேசியவாத எண்ணங்களுக்கு இடமளியாத பரந்த நோக்கிலானதாக அமைய வேண்டும்.

அகப்பட்டவர்களுக்கெல்லாம் துரோகி பட்டம் கட்டும் கலாச்சாரத்தையும் கைவிட வேண்டும்.

நாட்டின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதே எமது முதலும் முக்கியமானதுமான நோக்கமாக இருக்க வேண்டும்.

அந்த நோக்கத்திற்காக நாம் யார் யாரெல்லாம் இணைந்து பணியாற்ற முடியுமோ பணியாற்ற முன்வர வேண்டும்.

போதை ஊட்டும், உணர்ச்சியூட்டும் காரிய சாத்தியமற்ற அரசியலை ஒதுக்கிவிட்டு எமது மக்களுக்கு அரசியல் உரிமைகள் கிடைப்பதற்கும் எமது பிரதேசங்களில் அபிவிருத்தி நடைபெறுவதற்கும் அகதிகளான மக்கள் தமது சொந்தக்காலில் எழுந்து நிற்பதற்கும் நாட்டில் ஜனநாயக நிறுவனங்களை பலப்படுத்துவதற்கும் சமூகங்களிடையே நல்லுறவை, புரிதலை ஏற்படுத்துவதற்கும் தகுந்ததான ஐக்கியத்திற்கான முயற்சிகளை முன்னெடுப்போம்.

இதுவே எமது குறிக்கோளாக இருந்தாலும் காரிய சாத்தியமான இடத்திலிருந்து ஆரம்பிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தமாதிரியான தமிழர் இயக்கங்கள் தமிழர்களுக்கு பாதுகாப்பானதாக இருக்கும் ?

**வட-கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் தோழர் அ. வரதராஜப்பெருமாளிடம் தமிழகத்திலிருந்து வெளிவரும் குமுதம் வார சஞ்சிகை கேள்வி**

(குமுதம் சஞ்சிகைக்கு வழங்கிய செவ்வியிலிருந்து)

**இதுநாள் வரை எங்கே இருந்தீர்கள்? என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? மீண்டும் இலங்கை அரசியலில் பிரவேசிக்கும் எண்ணம் உண்டா?**

1990ல் பிரேமதாசா – பிரபாகரன் உறவு எங்களை இலங்கையில் இருக்க முடியாமல் செய்தது. 1998 வரையான எட்டு ஆண்டுகள் இந்தியாவில் இருந்தேன். சந்திரிகா அவர்கள் 1994ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த போதும் 1998ன் இறுதிக் கட்டத்திலேயே. நான் மீண்டும் இலங்கை செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. 2002ம் ஆண்டு ரணில்விக்கிரமசிங்கா – பிரபாகரன் உறவு ஆரம்பமானதைத் தொடர்ந்து நான் இலங்கையில் இருக்க முடியாத நிலைமை ஏற்பட்டது. அதனால் 2003ம் ஆண்டின இறுதிப்பகுதியிலிருந்து மீண்டும் இந்தியாவிலேயே இருக்க வேண்டியாயிற்று.

எனது நிலையை நீங்கள் புரிந்த கொள்ள வேண்டுமானால், இந்தியாவில் உங்களுடைய மாநிலத்தில் புலிகள் போன்ற ஒரு பயங்கரவாத ஆயுதக் குழுவுக்கு நீங்கள் ஆதரவு கொடுத்து, உங்கள் நாட்டு மத்திய அரசாங்கமும் இராணுவமும் உங்கள் மாநில ஆட்சிக்கு எதிராகச் செயற்படுவதற்கு அந்த ஆயுதக் குழுவுக்கு ஆயுதங்களை அள்ளிக் கொடுத்து நட்பாகவும் துணையாகவும் இருந்தால் உங்கள் மாநில முதலமைச்சர் என்ன செய்ய வேண்டியேற்பட்டிருக்கும் எனக் கற்பனை பண்ணிப் பார்த்தீகளேயானால் எனது நிலைமையை உங்களால் இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி ஆனபின் இலங்கையில் யுத்தநிலைமை வீறுகொண்டது. தமிழ்க் கட்சிகள் ஒன்றில் புலிகளுக்கு எடுபிடிகளாக இருக்க வேண்டும் அல்லது சிறீ லங்கா அரசாங்கத்துக்கு அனுசரணையாக இருக்க வேண்டும். வேறுவகையாக அங்கு எந்தத் தமிழரும் சுதந்திரமாக அரசியலில் இருக்க முடியாது என்ற நிலைமை இருந்ததால் புலிகள் இருக்கும் வரை நான் மீண்டும் செல்லும் நிலைமை ஏற்படவில்லை.

இப்பொழுது நிலைமைகள் மிகவும் பாரிய அளவில் மாற்றத்துக்கு உள்ளாகியுள்ளது. புலிகளால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட இப்பொழுதுதான் தங்களது சொந்தக் கருத்துக்களை வெளியிடுகிறார்கள். அவர்கள் இப்போது அரசை மட்டுமல்ல புலிகளையும் கண்டித்து விமர்சனம் செய்கிறார்கள். இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் இப்பொழுதுதான் தமிழ மக்கள் சுதந்திரமாக பேசுகிறார்கள், பயமில்லாது நடமாடுகிறார்கள். சட்டபூர்வமான கட்சிக்காரர்களை உயிர்ப்பயமின்றி சந்திக்கவும் கலந்துரையாடவும் தயாராக இருக்கிறார்கள். எனவே மிகவிரைவில் மீண்டும் இலங்கை செல்வேன். ஆனால் தேர்தல் அரசியலில் பங்குபற்றும் எண்ணம் எதுவும் என்னிடம் நிச்சயமாகக் கிடையாது.

**இன்றைய நிலையில் எந்தமாதிரியான தமிழர் இயக்கங்கள் இலங்கைத் தமிழர்களுக்கு பாதுகாப்பானதாக இருக்கும் என்று கருதுகிறீர்கள்?**

இன்னுமொருதடவை தமிழர்களின் உரிமைகள் குறித்து ஆயுதம் தாங்கிய இயக்கமொன்று எந்தவொரு அளவிலும் எந்தவொரு வடிவிலும் தலைதூக்கிவிடக் கூடாது.

அனைத்து இலங்கைத் தமிழர்களும் ஒற்றுமையான இலங்கை தமது தாயகம் என மனப்பூர்வமாக உரிமையோடு உணரும் நிலை ஏற்பட வேண்டும். சிங்கள மக்களினதும் முஸ்லிம் மக்களினதும் அன்பையும் ஆதரவையும் திரட்டும் நோக்கம் வேண்டும். தமிழருக்கு ஜனநாயக உரிமைகளைக் கோரும் போது தமிழர்களின் சமூகத்துக்குள் தமிழர்களின் இயக்கங்களுக்குள் ஜனநாயகம் இருக்க வேண்டும். தமிழர்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் எனக் கோரும் ஒரு இயக்கம் முதலில் தமிழர்களின் தனிமனித சுதந்திரங்களை அங்கீகரிக்க வேண்டும். தமிழ்மக்கள் இரண்டாம் தர பிரஜைகளாக இருக்கக்கூடாது என்று கோரும் போது தமிழர்களுக்குள் இரண்டாம் தர பிரஜைகள் இருக்கும் நிலை மாற வேண்டும். தமிழர்களிடமிருந்து எப்படியாவது என்ன சொல்லியாவது வாக்குகளை வாங்கிவிட வேண்டும் என செயற்படும் அரசியல்வாதிகளால் பயனில்லை. அதேபோல கொலைகளையும் சாவுகளையும் குவிக்கின்ற மாவீரர்களின் இயக்கத்தாலும் தமிழர்களுக்கு அழிவே. ஒரு உழவன் எவ்வளவு உழுதான் எவ்வளவு விதைத்தான் என்பதல்ல பிரதானம் எவ்வளவை அவன் அறுவடை செய்தான் என்பதை வைத்தே அந்த உழவனின் திறமையை எவரும் அளவிடுவர். எனவே தமிழர்களுக்கு உரிய அரசியல் பொருளாதார வாழ்வைப் பெற்றுக் கொடுக்கும் இயக்கமே வேண்டும். மக்களை உண்மையாகவும் நேர்மையாகவும் நல்ல எதிர்காலத்தை நோக்கி வழி நடத்தும் தலைவர்கள் தமிழர்களுக்கு வேண்டும்.

**பிரபாகரன் இறந்து விட்டார் என்பதை நம்புகிறீர்களா? இங்குள்ள அரசியல் தலைவர்கள் பலரும் அவர் இறக்கவில்லை. அவர் மீண்டும் தோன்றுவார் என்று கூறுகிறார்களே. அவரது இறப்புச் செய்தி கேட்டபோது உங்கள் மனநிலை எப்படி இருந்தது?**

பிரபாகரன் கொல்லப்பட்டார் என நம்புவதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. அவை உங்களுக்கும் தெரியும். பிரபாகரன் கொல்லபடவில்லை என்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லையே. கணணியில் வெட்டி ஒட்டும் தொழில் நுட்பம் ஓர் ஆதாரமாகாது. உருவெடுத்தாடி வாக்கு சொல்லும் பூசாரிகளின் நாக்குகளும் நம்பத்தகாதவை.

பிரபாகரன் கொல்லப்படவில்லை இன்னமும் உயிரோடுதான் இருக்கிறார் என்று பிடிவாதமாகச் சொல்லுபவர்களுக்கு தனிப்பட்ட சுயநல உள்நோக்கங்கள் இருக்கின்றன என்றே கருதவேண்டும்.

- பிரபாகரனால் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட சிறந்த தமிழர்கள் கொல்லப்பட்டார்கள்
- மூவாயிரத்துக்கு மேற்பட்ட ஏனைய இயக்கப் போராளிகள், போராட்டத் தலைவர்கள் கொல்லப்பட்டார்கள்,
- இந்திய இராணுவத்துக்கு ஆதரவாகச் செயற்பட்டார்கள் தொடர்பு வைத்திருந்தார்கள் என மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் கொடூரமான சித்திரவதைக் கூடங்களில் வைத்துக் கொல்லப்பட்டார்கள்,
- இலங்கை அரசபடைகளுக்கு தகவல் கொடுத்தவர்கள் குடிக்கத் தண்ணி கொடுத்தவர்கள் மீன் விற்றவர்கள், கோவிலில் பூஜை செய்தவர்கள் எனப்பலவகைப்பட ஆதரவாக இருந்தார்கள் என்ற பெயரில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டு வீதிகளில் எறியப்பட்டார்கள்,
- தமக்கு அடங்காதவர்கள் என்பதற்காக அரசியற் தலைவர்கள் அரசாங்க அதிகாரிகள், ஆசிரியர்கள் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் சமூக சேவகர்கள் மதகுருமார்கள், வியாபாரிகள் மாணவ தலைவர்கள் என இரண்டாயிரத்துக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்
- முஸ்லிம்கள் என்பதற்காக ஆயிரத்துக்கு மேற்பட்டோர் ஆலய வழிபாடுகளில் இருந்த போது கொல்லப்பட்டார்கள், ஒரே நாளில் ஒரு லட்சம் முஸ்லிம்கள் உடுத்த துணியோடு வடக்கு மாகாணத்தை விட்டே விரட்டப்பட்டார்கள்
- ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுப்பினர்களின் பெற்றோர்கள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் என்ற ஒரே காரணத்துக்காக நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டார்கள். ஆயிரக்கணக்கானோர் நாடு கடத்தப்பட்டார்கள்

*இவைமட்டுமல்ல,*

- முப்பதாயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் பிரபாகரனால் ஏமாற்றப்பட்டு கட்டாயமாக ஆயுதபாணிகளாக்கப்பட்டு போர்க்களங்களில் சாக விடப்பட்டிருக்கிறார்கள்.
- 1987க்குப் பின்னரும் அநியாயமாகப் போரை நடத்தி அப்பாவித் தமிழர்கள் எழுபதாயிரம் பேரின் சாக வேண்டி ஏற்பட்டதற்கு பிரபாகரனே பிரதானமான பொறுப்பு.
- தானும் தன்னைச் சேர்ந்த சிலரும் உயிர்தப்புவதற்காக மூன்று லட்சம் மக்களை போர்க்களத்தில் பிரபாகரன் பயணக்கைதிகளாக வைத்திருந்ததுவும் உலகறியும்.

இவ்வாறு பிரபாகரன் நடத்தியுள்ள போர்க்குற்றங்களுக்கு ஒரு நாகரீகமான நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தால் கூட அவர் குறைந்த பட்சம் ஆயிரம் மரண தண்டனைகளுக்கு உள்ளாக்கப்படவேண்டியவராவார். பிரபாகரனால் அனைத்து தமிழர்களினது மனங்களும் கல்லாக இறுகிப் போய்விட்டன.

தமிழ்ச் சமூகத்தில் இரக்கம், கருணை, மனிதாபிமானம், மாற்றுக் கருத்துக்களை மதித்தல், வேற்றுமைகளிலும் ஒற்றுமை காணுதல் என்பன இனியாவது மலரட்டும். கொலைகள் செய்வது மட்டுமல்ல, கொலைகாரர்களை மாவீரர்களாகப் போற்றுதலும் சமூகக்குற்றமே, கொலைகளைத் தடுத்து நிறுத்தத் தவறுவதுவும் ஒரு சமூக அழிவுக்குப் பங்கு செலுத்தலே.

**நீங்கள் ஆண்டபோது வன்னி எப்படி இருந்தது? இன்று வன்னியின் முகமே மாறிவிட்டது. இன்றைய வன்னியின் நிலைபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்.**

1983க்கு முன்னர் வன்னியின் அனைத்து மாவட்டங்களும் அரிசியில், மரக்கறி வகைகளில், இறைச்சி வகைகளில், பால் உற்பத்திகளில் சுயதேவைக்கும் மிஞ்சி உற்பத்தி செய்த மாவட்டங்களாக இருந்தன. இலங்கையில் அவ்வாறு தன்னிறைவு கொண்ட பதினொரு மாவட்டங்கள் இருந்தன. அவற்றில் ஏழு மாவட்டங்கள் வடக்கு-கிழக்கிலேயே இருந்தன. எனது ஆட்சிக் காலத்தில் வன்னியின் காடுகளே புலிகளின் மறைவிடத் தளங்களாக இருந்தன. பின்னர் புலிகளின் ஆட்சிக்காலத்தில் வன்னி மக்கள் அனைவரும் புலிகளின் யுத்தத் தொழிலின் கருவிகளாகவும் அடிமைத் தொழிலாளர்களாகவும் ஆக்கப்பட்டிருந்தார்கள். இலங்கை அரசாங்கம் அனுப்பும் ரேசன் உணவிலேயே புலிகள் தமது தமிழீழ விடுதலைத் தாகத்தைத் தீர்த்ததுக் கொண்டிருந்தார்கள். கடந்த வருடம் நடந்த கடுமையான யுத்தத்தால் வன்னி சின்னாபின்னமாகி பின்னர் மக்களற்ற மண்ணாயிற்று. இப்போது மக்கள் மீண்டும் குடியேறத் தொடங்கியிருக்கிறார்கள். மிகவிரைவில் வன்னி தன்னிறைவு காணும் பிரதேசமாக மாறும் என்பதில் ஐயமில்லை.

**ஒரு வேளை ஜெயவர்த்தனே — ராஜீவ் ஒப்பந்தம் தொடர்ந்திருக்குமானால் இன்றைய மோசமான நிலைமை ஏற்பட்டிருக்காது என்று கருதுகிறீர்களா?**

ராஜீவ் காந்தி ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தின் பிரகாரம் அதில் கூறப்பட்டிருக்கும் விடயங்கள் அனைத்தும் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டிருந்தால் [illegible] இன்றைய மோசமான நிலைமை [illegible] இலங்கையோ [illegible]யிருக்கமாட்டா.

**நீங்கள் அரசியல்வாதி, போராளி மகள் நீலாம்பரி இப்போது சினிமாவில் இதுபற்றி உங்கள் கருத்து என்ன?**

நான் இன்றுவரையும் அரசியல்வாதியல்ல. அரசியற் போராளியாகவே இருந்திருக்கிறேன். இப்போதும் கூட தேர்தல் அரசியல்வாதிக்கு அவசியமான சுபாவமே குணாம்சங்களோ என்னிடம் இருப்பதாகத் தெரியவில்லை. நான் அரசியல் அதிகாரத்தைக் கொண்ட அரசுக்கு முதலமைச்சராக இருக்கவில்லை. மாறாக வடக்கு-கிழக்கு மாகாண அரசுக்கு அதிகாரங்களைப் பெறுவதற்குப் போராடிய ஒரு முதலமைச்சராகவே இருந்தேன். எனவே இந்திய நாட்டிலுள்ள ஒரு முதலமைச்சருக்குச் சமனாக என்னைக் கற்பனை பண்ணிப் பார்க்காதீர்கள்.

எனது மனைவி அங்கயற்கண்ணி பரதநாட்டியம் கற்றவர். எனது மகள் நீலாம்பரி சிறுவயதிலிருந்தே நடனம் பயிலுதல் ஓவியம் வரைதல் நாடகங்களில் நடித்தல் என கலைத்துறையில் ஈடுபாடு காட்டி வளர்ந்தவர். டெல்லியில் பட்டதாரியானார், பின்னர் சட்டத்தரணியானார். எனினும் அவருக்கே இயல்பான கலைத்துறையின் ஈடுபாடு அவரை சினிமாவுக்குள் அறிமுகப்படுத்துகிறது எனக் கருதுகிறேன்.

**இலங்கையில் போர் நிறுத்தம் கேட்டு தமிழக முதல்வர் கருணாநிதி உண்ணாவிரதம் கூட இருந்தார். இலங்கை வாழ் தமிழர்களின் முன்னேற்றத்துக்கு தமிழக முதல்வர் என்ன செய்ய வேண்டும் என நினைக்கிறீர்கள்?**

பிரபாகரனால் தமிழர்களின் தலைமை முற்றாக அழிக்கப்பட்டு இலங்கைத் தமிழர் சமூகம் இன்று பல்வேறு வகையிலும் சீரழிந்து கிடக்கிறது. இலங்கைத் தமிழர்கள் மத்தியில் சரியான ஜனநாயகத் தலைவர்கள் உருவாகி வளர்வதற்கு தமிழக முதல்வரும் மற்றும் தலைவர்களும் நிச்சயம் உதவ முடியும். இப்போதுதான் முதற் தடவையாக சிங்களத் தலைவர்களோடு தமிழகத் தலைவர்கள் நேரடியான அரசியல் உறவுகளை மேற்கொள்ளத் தொடங்கியிருக்கிறார்கள். அதனை மேலும் நல்ல முறையில் விரிவுபடுத்தி தமிழர்களுக்கு நியாயமான அளவுக்கு அதிகாரப் பரவலாக்கல் கிடைப்பதற்கு தமிழக முதல்வரும் எனைய தமிழகத் தலைவர்களும் துணைசெய்ய வேண்டும். மேலும் முப்பது வருட யுத்தத்தால் அழிந்து கிடக்கும் தமிழ்ப் பிரதேசங்களினது முன்னேற்றங்களுக்கும் தமிழர்களின் பொருளாதார மீளெழுச்சிக்கும் தமிழக அரசு நிதி வகையாகவும் தொழில் நுடப ரீதியாகவும் உதவ வேண்டும். இவையே எனது எதிர்பார்க்கைகள்.

**தமிழீழம் அவ்வளவுதானா?**

இன்னொரு தடவை அவ்வாறானதொரு கோரிக்கை மேலெழாமற் பார்த்துக் கொள்வதே இலங்கைத் தமிழர்களுக்கு நல்லது முழு இலங்கையர்களுக்கும் நல்லது, தமிழகத்துக்கும் நல்லது, இந்தியாவின் நலன்களுக்கும் அது அவசியமே.

## மக்களுடன் சந்திப்பு

பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மூத்த தலைவரும், முன்னாள் வடக்கு- கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சருமான தோழர் அ.வரதராஜப்பெருமாள் அவர்கள் யாழ் மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் உள்ள கிராமங்களுக்கும் சென்று பொதுமக்களை நேரில் சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து வருவதுடன் கட்சியின் அரசியல் நிலைப்பாட்டினையும் தெளிவுபடுத்தி வருகின்றார். கடந்த கால எதிர்கால அரசியல் நகர்வுகளின் சாதக, பாதகங்கள் குறித்தும் அவர், மக்களோடு கருத்துக்



களை பகிர்ந்துகொண்டார். தமிழ் தலைமைகளும் தமிழ் மக்களும் தமது அரசியல் உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கு கிடைத்த சந்தர்ப்பங்களை வீணாக்கி விட்டதாகவும், இனி தனிநாடு ஆயுதப் போராட்டம் என்பவற்றை விடுத்து ஜனநாயக ரீதியில் அரசியல் தீர்வு ஒன்றை பெற முனைவதே பொருத்தமானதாகும் எனவும் எடுத்துக்கூறி வருகிறார். சாவகச்சேரி, புத்தூர், அளவெட்டி, கோப்பாய், கைதடி சுண்ணாகம் ஆகிய பல இடங்களில் இத்தகைய சந்திப்புக்கள் இடம்பெற்றுள்ளன. இந்த சந்திப்புக்களின் போது மக்களின் தேவைகள், குறைகள் தொடர்பாக கேட்டறிவதுடன் அவர்களின் கருத்துக்களையும் செவிமடுத்து வரும் தோழர் வரதராஜப்பெருமாள் அவர்களுடன், பத்மநாபா ஈபிஆர்எல்எவ் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சிறிதரன் அவர்களும் பிரசன்னமாகியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினை தீர்வு இனிமேலும் தொடர்கதையாக முடியாது

**இன்ப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு அவசியமில்லை இந்த நாட்டில் சமத்துவமான வாழ்வொன்றை ஏற்படுத்தினால் சரி என்று பிரச்சினைகளிலிருந்து**

**தவிர்ந்த அதிகாரங்கள் வழங்கப்படுதல் பற்றி இனப்பிரச்சினை தீர்வுக்கான யோசனைகள் நலிவடைந்து சென்றிருக்கின்றன.**

நாட்டில் இனப்பிரச்சினை என்று ஒன்றில்லை, பயங்கரவாதப் பிரச்சினைதான் காணப்பட்டது அதற்கு தீர்வு காணப்பட்டுவிட்டது என்ற பாணியில் காரியங்கள் நடைபெறுகின்றன. பயங்கரவாதத்திற்கு வேராக இருந்தது எது என்பது பற்றிய பிரக்ஞை இல்லாதது போல் பேச முனைகிறார்கள்.

உண்மையில் தமிழ் பாசிசத்தின் மூல ஊற்றாக இருந்ததில் பௌத்த சிங்கள இனவாதத்தின் பங்களிப்பை யாரும் மறுத்துவிட முடியாது. இவை ஒன்றையொன்று போசித்து சகல இலங்கை மக்களினதும் வாழ்வை நாசமாக்கின.

இன்றும் இதே சிந்தனை போக்குகள் காணப்படுகின்றன. தமிழ் மக்கள் மத்தியிலிருந்த ஜனநாயக விரோதப் போக்கு, பாசிசம் தோற்கடிக்கப்பட வேண்டிய அவசியம் இருந்தது. அது தோற்கடிக்கப்பட்டது. அது இலங்கையின் அனைத்து சமூகங்களுக்கும் தேவைப்பட்டது. ஆனால் அது சிங்களவர்கள் தமிழர்கள் மீது பெற்ற வெற்றியாக தவறாக, உணர்ச்சிகரமானதாக சித்தரிக்கப்படுகிறது.

இந்த சிங்கள வெற்றி பற்றிய பெருமிதவாத உணர்வுகளும் தோற்கடிக்கப்பட வேண்டும். அதிலேதான் உண்மையான இலங்கையர்கள் உருவாக முடியும். இல்லாவிடில் இந்த நாட்டில் இலங்கையர்களை விட தமிழர்களும் சிங்களவர்களும் முஸ்லீம்களும் வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

மனதளவில் சமூகங்கள் ஒன்றிணைவதற்கு தடைகள் நீக்கப்பட வேண்டும். இந்த ஒன்றிணைவு சுயாதீனமான நிலையில் ஏற்படுத்தப்பட வேண்டும். ஆக்கிரமிப்பாக, திணிப்பாக இது நிகழ முடியாது. இன சமூகங்களின் சுயமரியாதை, கௌரவம், சமத்துவத்தின் அடிப்படையிலேயே இது நிகழ முடியும். ஆனால் அந்தப் பக்குவம் எமது நாட்டில் இன்னும் வரவில்லை. இழுபறி நிலையே காணப்படுகிறது.

எண்ணிக்கையில் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையில் வன்னி மக்களை முட்கம்பி வேலிகளுக்குப் பின்னால் எவ்வளவு காலத்திற்கும் வைத்திருக்கலாம் என்பது இனவாத சாயலை கொண்டதாக அல்லாமல் வேறு எந்த வகையிலும் உலகம் அர்த்தம் கற்பிக்காது.

இலங்கையில் பெரும்பான்மை சமூகத்தின் அங்கத்தவர்கள் ஒரு கிளர்ச்சியின் பேரில் இவ்வாறு முட்கம்பி வேலிகளுக்குப் பின்னால் வைக்கப்பட்டிருப்பதை நினைத்துப் பார்க்க முடியாது.

தமிழ் பாசிசம் சக தமிழர்கள் தொடர்பாகவும், சக சமூகங்கள் தொடர்பாகவும் எத்தகைய வழிமுறைகளை கைக்கொண்டதோ அதன் கூறுகளை கொண்டதாக ஆட்சியாளர்கள் நடந்து கொள்ள முடியாது.

அனைத்து சமூகத்தினருக்கும் நீதியானதும், பாரபட்சம் இல்லாததுமான வாழ்வை அமைத்துக் கொடுப்பது ஆட்சியாளர்களின் கடமை.

தமிழ்ச்சமூகம் பாரிய அழிவை சந்தித்திருக்கிறது என்பதையும் இளைய தலைமுறையினரில் கணிசமானவொரு பகுதி கல்வியை இழந்திருக்கிறது என்பதையும் உணர்வுபூர்வமாக அறிந்திருக்க வேண்டும். நலிவுற்ற தலைமுறையொன்று உருவாக்கப்படுவது இலங்கையின் ஒட்டுமொத்த சமூக பொருளாதார அபிவிருத்தியையும் பாதிக்கும் என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். இல்லாமல் ஒரு இன சமூகத்தின் வெற்றி இன்னொரு இன சமூகத்தின் நலிவு என்பதில் தங்கியிருக்கிறது என்ற சிறுமைத்தனமான யோசனைகள் மீண்டும் மீண்டும் அவலங்களையும் துயரங்களையுமே ஏற்படுத்தும்.

இது தனியே குறிப்பிட்டவொரு சமூகத்திற்கு என்றில்லாமல் முழு நாட்டையுமே சீரழிவுக்குள் சிக்க வைத்துவிடும்.

ஒரு நாடு வெற்றிகரமாக இருப்பதற்கும் அந்த நாட்டில் நிலவும் ஜனநாயகத்துக்கும் தொடர்பு உண்டு.

ஒரு நாட்டில் சமூகத்தில் பல்வேறு மட்டங்களிலும் சமூகங்களிடையிலும் ஜனநாயகம் நிலவுகையில்த்தான் அந்த நாடு வெற்றியை நோக்கிய நாடாக அமைகிறது.

மனித மனம் அமைதியை இழந்து காணப்படும் போது விரக்திக்கும், கோபத்திற்கும் உள்ளாகியிருக்கும் போது அங்கு மனிதனின் படைப்பாற்றல் வலுவிழந்து போகிறது. ஏனோதானோ என்று காரியங்கள் ஆற்றப்படுகின்றன. வன்முறையும், ஊழலும் அதிகரிக்கின்றன.

எனவே ஜனநாயகம் என்பது சகல மனிதர்களும் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை முழுமையான பங்காளர்களாகும் நடைமுறையுமாகும்.

அவ்வாறு பங்காளர்களாக ஆவதற்கு தனி மனிதனின் ஜனநாயக, மனித உரிமை அடிப்படை உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அதிகாரப் பகிர்வு, சுயநிர்ணய உரிமை, ஜனநாயகம் போன்ற கருத்துக்கள் மக்களின் சமூக பொருளாதார வாழ்வை உயர்த்துவதற்காகவே மனிதகுல அனுபவங்களில் இருந்து உருவாக்கப்பட்டவை.

எனவே அதிகாரப் பகிர்ந்தளிப்பும் மக்களின் சுதந்திரமான வாழ்வும் என்பது இங்கு மையமான விடயங்களாக அமைகின்றன.

நாட்டின் பாதுகாப்பு, வெளிவிவகாரம், பிரஜாவுரிமை உள்ளிட்ட விடயங்கள் தவிர இதர விடயங்கள் நாட்டின் பிராந்திய மட்டத்திற்கும் இன, சமூகங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அரச இயந்திரத்தின் பற்சக்கரங்கள் இலகுவாக இயங்குவதற்கு பிராந்திய மட்டத்திலும் அரச கட்டமைப்பின் பகுதிகளை கொண்டிருக்க வேண்டும்.

இதனை பிரிவினை, அதற்கான படி என்று கிலிகொள்ளத் தேவையில்லை. பீதி கொள்ளத் தேவையில்லை. மக்கள் சமூகங்கள் நெருக்கமாக வருவதற்கு அவற்றின் பண்பாட்டு, மொழி தனித்துவங்கள் கலாச்சார வாழ்வு என்பன பரஸ்பரம் மதித்துப் போற்றப்பட வேண்டும்.

இங்கு சமூக ரீதியான புண்படுத்தல்கள் நிகழக் கூடாது.

இதுவே நாட்டின் ஆரோக்கியத்திற்கு நல்லது. அல்லாமல் முடைநாற்றம் வீசும் ஆக்கிரமிப்பு, மேலாதிக்கவாத, கசட்டுச் சிந்தனைகள் இந்த நாட்டில் தொடர்ந்து சமூக சிதைவு இயக்கமாகவே அமைந்து விடும்.

நாம் எல்லோரும் மனிதர்கள் என்ற வகையில் சமத்துவமாக ஒருவரையொருவர் புரிந்து கொள்வதற்கும் இணைந்து பணியாற்றுவதற்கும் முயல்வோம். ●

# மேற்குலகின் இராஜதந்திரம் பலிக்குமா?



இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் இலங்கைக்கு ஓர் இக்கட்டான நிலையை ஏற்படுத்தி உள்ளன.

புலிகளின் தலைவர்கள் அரச படைகளால் சுற்றிவளைக்கப்பட்டு யுத்தம் இறுதிக்கட்டத்தை அடைந்த போது இதற்குள் 3 இலட்சத்திற்கு மேற்பட்ட பொதுமக்களும் அகப்பட்டுப் போயிருந்தார்கள்.

புலிகளுக்கு எதிரான இலங்கை விமானப் படையின் குண்டுத் தாக்குதலிலும், காலாட்படையின் பீரங்கித் தாக்குதல்களாலும் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள்.

புலிகளோ பொதுமக்களை அங்கிருந்து தப்பியோட விடாமல் துப்பாக்கி முனையில் தடுத்து வைத்திருந்தார்கள் தப்பியோட முற்பட்ட பலரை தாக்கினார்கள், சுட்டுக் கொன்றார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஐ.நாவும், மேற்கு நாடுகளும் இலங்கை அரசை கண்டிக்க ஆரம்பித்தன. யுத்தநிறுத்தத்தை வலியுறுத்தின. இலங்கை அரசோ யுத்தத்தை தொடர்வதில் உறுதியாக நின்றது. ஐ.நா மற்றும் மேற்குலக நாடுகளின் வற்புறுத்தலைச் சட்டை செய்யவில்லை.

ஒரு கட்டத்தில் ஐ.நா அதிகாரிகளும், மேற்குலக நாடுகளும் பிரபாகரனையும், அவரது தலைவர்களையும் இறுதி நேரத்தில் காப்பாற்ற முயற்சித்தன. ஆனால், இலங்கை அரசோ பிரபாகரனையும், அவரைச் சூழ்ந்து நின்ற புலித் தளபதிகள் மற்றும் புலி முக்கியஸ்தர்களையும் கொன்றொழிக்கும் வரை யுத்தத்தை நிறுத்தவில்லை.

இந்தப் பின்னணியிலேயே ஐ.நா செயலாளரும் சில மேற்கு நாடுகளும் மஹிந்த ராஜபக்ஸவின் ஆட்சிக்கெதிராக ராஜதந்திர போர்க்கொடிகளை தூக்கின. ராஜபக்ஸவையும் சர்வதேச குற்றங்களுக்கான நீதிமன்றத்தில் யுத்தக் குற்றவாளியாக நிறுத்த முயற்சித்தன. இந்தியா ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் அதற்குத் தடையாக இருந்ததால் அந்த முயற்சி பலனளிக்கவில்லை.

ஆனாலும் ஐ.நா செயலாளரும், ஐரோப்பிய நாடுகளும் விடுவதாய் இல்லை ஐரோப்பிய நாடுகள் இலங்கைக்கு வழங்கிவந்த வர்த்தகச் சலுகைகளை நிறுத்தி வைத்து பேரம் பேசுகின்றன. அதை ஆதாரமாகக் கொண்டு ஐ.நா செயலாளர் இலங்கையில் யுத்தக் குற்றங்களுககான விசாரணையை நடாத்த வேண்டுமென பல்வேறு திட்டங்களை அறிவித்து வருகின்றார். அதற்கென விசாரணைக் குழுக்களை இலங்கைக்கு அனுப்பிவைக்க முயல்கிறார். அதற்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டும் என தானும் ஏனைய நாடுகளின் ராஜதந்திரிகள் ஊடாகவும் வலியுறுத்தி வருகின்றார்.

ஐ.நா செயலாளரின் நடவடிக்கைகளை இலங்கை அரசும், விமல் வீரவன்சவின் தேசிய விடுதலை முன்னணி மற்றும் ஹெல உருமயவும் இலங்கையின் இறைமைக்கு எதிரான அச்சுறுத்தல் என வெளிப்படையாக கூறினும் இது மஹிந்த அரசுக்கு எதிரான சதியாகவே பார்க்கின்றன.

இந்த விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியோ, மங்கள சமரவீராவோ, ஜெனரல் சரத் பொன்சேகாவோ அல்லது ரில்வின் சில்வாவின் ஜே.வி.பியோ ஐ.நா மற்றும் மேற்கு நாடுகளின் யுத்தக் குற்றங்கள் பற்றிய குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக இல்லை. அவர்கள் ஒருவகையில் ஐ.நா. மற்றும் மேற்குலக நாடுகளின் நிலைப்பாட்டுக்கு ஆதரவாகவே உள்ளனர். ஜெனரல் சரத் பொன்சேகா கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் மத்தியில் இறுதி நேர யுத்த சம்பவங்களிற்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்றார். ஆனால், சிங்கள மக்கள் மத்தியில் பேசுகையில் தானேதான் இறுதிவரை இராணுவத்திற்குத் தலைமையேற்று கட்டுப்பாட்டோடு வழிநடாத்தி புலிகளுடனான யுத்தத்தில் வெற்றியை ஈட்டிக் கொடுத்த வீரத்தளபதி என முழங்கினார். அப்படிப் பார்த்தால் சர்வதேச குற்றச் சட்டங்களின்படி அவரையும் யுத்தக் குற்றவாளியாக உலகநாடுகள் கருத இடமுண்டு.



ஐ.நா செயலாளரோ, அல்லது மேற்குலக பிரதிநிதிகளோ யுத்தத்திற்கு தலைமை தாங்கிய ஜெனரல் சரத் பொன்சேகா மீது குற்றம் கூறுவதில்லை. இந்த நாடுகள் எவ்வாறு ஜெனரல் சரத்பொன்சேகாவை யுத்தக் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுதலை செய்தன என்பது புரியாத புதிராக உள்ளது.

கொழும்பில் விமல் வீரவன்ச ஐ.நா செயலகத்திற்கு முன்பாக நடாத்திய போராட்டம் ஒரு இக்கட்டான நிலையை இலங்கை அரசுக்கு ஏற்படுத்தியுள்ளது. இது இலங்கை அரசை மேற்குலக நாடுகள் தனிமைப்படுத்த வழிவகுக்கும் என ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார். மேற்குலக நாடுகள் தமது பிடியை இளக்குவார்களா? அல்லது மேலும் இறுக்குவார்களா? மேற்குலகம் பிடியை இறுக்கினால் இந்தியாவும் சீனாவும் மஹிந்த ராஜபக்ஸ அரசை பாதுகாப்பார்களா? அதற்கு மஹிந்த அரசு என்ன விலை கொடுக்க வேண்டி ஏற்படும் என்ற பல கேள்விகள் இங்கு தொக்கி நிற்கின்றன. ●

## மக்களின் வாழ்வை வளம் மிக்கதாக்க தங்களின் வாழ்வை அர்ப்பணித்த உன்னத போராளிகள்



யோகசங்கரி



கபூர்



குமார்



கதிர்



ஜோர்ச்



பெஞ்சமின்



கிருபா



நடேசலிங்கம்



சின்னவன்

தி. சிறிதரன் 29ஏ, வாவிக்கரை வீதி, மட்டக்களப்பு அவர்களால் இரத்தினபிட்டிய C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org